பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 30 திங்கட்கிழமை 15.08.2022 கதிர் 283

**இது ரகசியம் அல்ல!**

கூட்டமைப்புக்குள் குழப்பம் கொடிகட்டிப் பறப்பது தெரிந்த விடயம்தான். அது பரகசியம் தான்.

மற்றைய பங்காளி கட்சிகள் இரண்டும் – ரெலோவும் புளொட்டும் – அடுத்த பிரதான பங்காளியான இலங்கைத் தமிழரசை கைவிட்டு வழமைபோல ☞2

# எஞ்சிய புலம்பெயர் தரப்புகள் மீதான தடைகளையும் நீக்குக!



## ரணில் அரசிடம் ரெலோ கோரிக்கை

கொழும்பு, ஓகஸ்ட் 15

எமது தொடர்ச்சியான கோரிக்கைக்கு அமைய ஜனாதிபதி அண்மையில் சில புலம்பெயர் அமைப்புகளின் தடைகளை நீக்கி உள்ளமையை வரவேற்கிறோம். அதே நேரம் இன்னும் பல அமைப்புகளும் தனி நபர்களுடைய பெயர்களும் தடைசெய்யப்பட்ட பட்டியலிலேயே காணப்படுகின்றன. அந்தத் தடைகளையும் நீக்குமாறு நாம் ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் கோருகிறோம். ☞2

## தடை நீக்க அறிவிப்பு ரணில் அரசின் ஏமாற்று நாடகம் என ஸ்ரீதரன் காட்டம்



இலங்கைக்குள் தடை செய்யப்பட்ட 6 தமிழ் அமைப்புக்களின் தடையை இலங்கை அரசாங்கம் நீக்கியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சுதெரிவிக்கின்றது.

ஆனால், இது இலங்கை அரசின் ஏமாற்று நாடகம் என்று தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய தமிழர் பேரவை, உலகத் தமிழர் பேரவை, உலக திராவிட ஒருங்கிணைப்புக் குழு, திராவிட ஈழ மக்கள் கூட்டமைப்பு, கனடியத் தமிழர் பேரவை மற்றும் பிரித்தானிய தமிழர் ☞4

## போராட்டத்தைக் கைவிடோம்! பேராயர் மல்கம் ரஞ்சித் சூளுரை



காலி முகத்திடல் போராட்டம் நிறைவடைந்தாலும் ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கான போராட்டத்தை கைவிடப் போவதில்லை என பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதலின் பின்னணியில் அரசியல் சதி இருப்பதாகவும், ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையிலும் இது தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என தெரிவித்த பேராயர், ☞2

## அமைச்சர் பதவியை ஏற்கோம்! திகாம்பரம் எம்.பி. திட்டவட்டம்



சர்வகட்சி அரசாங்கம் ஒன்று அமையுமானால் அதற்கு ஆதரவு தெரிவிப்போமே தவிர, அமைச்சுப் பதவிகளை ஏற்க மாட்டோம் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

ஹட்டனில் இடம்பெற்ற தொழிலாளர் தேசிய சங்கத்தின் விசேட கூட்டத்தில் கலந்து கொண்டு ☞2

## நிலைமையை நேரில் கண்டறிய ஜெனிவா அதிகாரிகள் வருவர்!

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில், அந்த அமைப்பின் முக்கிய உறுப்பினர்கள் இருவர் இலங்கைக்கு விஜயம் செய்ய திட்டமிட்டுள்ளனர்.

ஜெனீவாவில் உள்ள மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் ஆசிய பசிபிக் ☞4

## ஜெனிவாவைச் சமாளிக்க விசேட பொறிமுறையாம்!

### அரசுத் தரப்பில் முஸ்தீபு



கொழும்பு, ஓகஸ்ட் 15

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் எதிர்வரும் கூட்டத்தொடரை எதிர்கொள்வதற்கு அரசாங்கம் விசேட பொறிமுறையையொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்துள்ளதாக நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ☞2

## இந்தியத் தொல்பொருள் நிபுணர்களை அனுப்பி ஈழத்துச் சிவாலயங்களை மீட்க வழி செய்யுங்கள்!

### 75 ஆவது சுதந்திர தின வாழ்த்தில் பிரதமர் மோடியிடம் இந்து சமயப் பேரவை கோரிக்கை

"இலங்கையில் புதையுண்ட, மறைந்து கிடக்கும் சிவாலயங்களைக் கண்டுபிடிக்க இந்தியத் திருநாட்டிலுள்ள தொல்பொருளாராச்சியாளர்களை இங்கு ஆய்வுக்குட்படுத்த வேண்டும்."

– இவ்வாறு இந்தியாவின் 75 ஆவது சுதந்திர தினத்தை ஒட்டி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பி வைத்த வாழ்த்தில் யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் தலைவர் ஈசான சிவ சக்தி கிரீவன் கோரிக்கை விடுத்துள்ளார்.

'இலங்கை வாழ் இந்துக்களைப் பாதுகாத்து உதவுங்கள்' என்ற தலைப்பில் அவர் அனுப்பி வைத்துள்ள அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:–

உலகில் ஜனநாயகத்தைச் சிறந்த முறையில் பேணும் இந்தியத் திருநாடு தங்கள் தலைமையில் 75 ஆவது சுதந்திரதினத்தைக் கொண்டாடும் இந்நேரத்தில் இலங்கைவாழ் இந்துக்கள் சார்பில் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

மேலும் கொவிட் தொற்று, பொருளாதர நெருக்கடிகளின் போது தாங்கள் வழங்கி வரும் உதவி களுக்கு எமது மனப் பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் ☞2

## இனி இது ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஏனைய தமிழர் தரப்புகளுடன் சேர்ந்து ஜெனிவா மனித உரிமைகள் கவுன்ஸிலுக்குக் கடந்த வாரம் தங்கள் கருத்து நிலைப்பாட்டை விவரிக்கும் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளன.

ஜெனிவாவை அணுகுவதில் கூட்டமைப்பு ஒன்றுபட்ட நிலைப்பாட்டில் இல்லை என்பதுதான் இதன் அர்த்தம். இலங்கைத் தமிழர்களை அதிகம் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சியாகத் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் தமிழ் கூட்டமைப்பு, தமிழர்களின் பிரச்சினையை ஒட்டி மூன்று தரப்புகளுடன் பிரதானமாக ஊடாட வேண்டி இருக்கிறது.

ஒன்று – இந்தியா.
இரண்டு – சர்வதேசம்.
மூன்றாவது – கொழும்பு அரசு.

இந்த மூன்றையும் அணுகுவதிலேயே கூட்டமைப்பின் பங்காளிக கட்சிகளுக்கு இடையே ஒற்றுமையோ, இணக்கமோ, உடன்பாடோ கிடையாது என்பது இப்போது வெளிப்படையானது. சர்வதேச தரப்பு என்றால் அதில் முக்கியமானது – இன்றைய நிலையில் – ஜெனிவா ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில்தான்.

'வழமை போல் இம்முறையும் ஜெனிவாவை நீங்கள் இப்படிப் பிரிந்து நின்று அணுகுவது சரியா? இப்படி நீங்கள் ஊடாட வேண்டிய வெளித்தரப்புகளை எல்லாம் பிரிந்து நின்றுதான் கையாளுவீர்கள் என்றால், தேர்தலையும் பிரிந்து நின்று தனித்தனியாக எதிர்கொள்வது தானே? வாக்குகளைச் சுருட்ட – கொள்ளையிட் – மட்டும் ஒற்றுமை வேஷம் போடும் நீங்கள் எப்படி மக்களின் சரியான பிரதிநிதியாக இருக்க முடியும்?' – என்று பங்காளி கட்சி பிரதிநிதி ஒருவரிடம் கேட்டேன். அவர் சொன்ன தகவல் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.

'ஜெனிவாவுக்கு அனுப்பும் கடிதத்தை நாங்கள் தமிழரசை விட்டு பிரிந்து நின்று முன்னெடுக்கின்றோம் என்று நீங்கள் கருதுவது தவறு. இந்த கடிதம் அனுப்புவது தொடர்பாக மற்றைய தமிழ்க் கட்சிகளோடு – ஆறு தமிழ் கட்சிகளாக – நாம் ஆராய்ந்தபோதுஎல்லாகூட்டங்களுக்கும் தவறாது சூம் மூலம் பங்கு பற்றியவர் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா. இக்கடிதம் இறுதி வடிவம் எடுக்கப்பட்ட பின் அது தமிழரசு தலைவர் மாவை சேனாதிராஜா உட்பட ஆறு தமிழ் கட்சிகளின் தலைவர்களுக்கும் வழங்கப்பட்டன. மாவை சேனாதிராஜாவுக்கு மேலதிகமாக ஒரு பிரதி தமிழரசின் பிரமுகர் சுமந்திரனின் மின்னஞ்சலுக்கும் அனுப்பப்பட்டது. உத்தேசநகல் கடிதத்தில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமானால் முற்கூட்டியே அறிவிக்கும்படி சேனாதிராஜாவிடம் கூறப்பட்டது.

'தமிழரசுத் தலைவரோ தாம் இவ்விடயம் குறித்து சம்பந்தன் மற்றும் சுமந்தினோடு பேசிவிட்டு வருகிறேன்' – என்றார். அவ்வளவுதான். அதற்குப் பின் எந்தப் பதிலும் இல்லை. கடிதத்தில் ஒப்பமிடவும் தமிழரசு முன் வரவில்லை. கடைசி வரைக் காத்திருந்து விட்டுத்தான் ஏனைய ஐந்து கட்சிகளின் தலைவர்களும் ஒப்பமிட்டுக் கடிதத்தை அனுப்பி வைக்கத் தீர்மானிக்கப்பட்டது' – என்று தெரிவித்தார் அவர்.

ஜெனிவாவை அணுகும் கூட்டு முயற்சி விடயத்தில் ஏனைய ஐந்து தமிழ் கட்சிகளும் தமிழரசை எட்டி உதைத்தனவா? அல்லது அவற்றுடன் சேர்ந்து செயல்படுவதில்லை என்று தமிழரசு தன் பாட்டில் முடிவு எடுத்துத் தள்ளி நிற்கின்றதா? எனக்கு விளங்கவில்லை. வாசகர்களே உங்களுக்குப் புரிகின்றதா?

– மின்னல் –

---

## அமைச்சர் பதவியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பேசியபோதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அவர், தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்–

தமிழ் முற்போக்குக் கூட்டணி மக்களின் நலன் கருதியும் எதிர்கால அரசியல் செயற்பாடுகள் கருதியும் நிதானமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஜனாதிபதியுடன் நடைபெற்ற பேச்சுகளின் போது, சர்வகட்சி அரசாங்கம் ஒன்று அமையுமானால் அதற்கு வெளியில் இருந்து ஆதரவு தெரிவிப்போம் என ஏற்கனவே நாங்கள் அறிவித்திருக்கின்றோம்.

சகல கட்சிகளும் ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலமாகவே நாட்டு மக்களின் பொருளாதார பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.

நாட்டின் பொருளாதார நிலைமை இன்னும் ஆறு மாதத்திற்கு மோசமாக காணப்படுமென ஜனாதிபதியும் அறிவித்துள்ளார். மேலும் இன்னும் இரண்டு வருடங்களுக்குப் பிறகே நாட்டின் பொருளாதார நிலைமை ஓரளவுக்கு சீரடையும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் அமைச்சுப் பொறுப்பை ஏற்பதனால் மக்களுக்கு எந்தவிதமான அபிவிருத்தியும் செய்ய முடியாது.

கௌரவத்துக்காக அமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்டு மக்களுக்குச் சேவை செய்யாவிட்டால் மக்கள் என்னைத் தூக்கி எறிந்து விடுவார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் தேர்தலுக்குப் பிறகு அமைச்சுப் பொறுப்பு ஒன்றை ஏற்றுக்கொண்டு மக்களுக்கு சேவை செய்வதே பொருத்தமென நினைக்கின்றேன். – என்றார்.

---

## இந்தியத் தொல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கொள்கிறோம்.

தாங்கள் 75 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடி மகிழும் இந்நேரத்தில் நாமும் உங்களோடு சேர்ந்து மகிழ்கின்றோம்.

தாங்கள் இலங்கைத் திருநாட்டில் நெடுங்காலமாகத் தீர்க்கப்படாத இனப் பிரச்சினையைக் கண்ணியமாகத் தீர்த்து வைப்பதற்கு அயராது மேற்கொள்ளும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மனதார வாழ்த்துகின்றோம்.

எனினும் தங்கள் பெருவிருப்புக்கு மாறாகப் பல்வேறு விடயங்கள் இங்கு நடைபெறுகின்றன என்பதைத் தாங்கள் நன்கறிவீர்களென்று நம்புகின்றோம். இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாக இங்கு இந்துக்களின் புனித பிரதேசங்கள் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டு வருகின்றமை எமக்குப் பெருங் கவலையை ஏற்படுத்துகிறது.

கிழக்கிலங்கையில் உள்ளவரலாற்றுப் புகழ் பெற்றதும் இந்தியத் திருநாட்டின் சீர்காழிப்பதியில் அவதரித்த திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளால் பாடல் பெற்றதுமான திருக்கோணேஸ்வர ஆலய வளாகத்தில் தமிழர் அல்லாதவர்கள் அத்துமீறிக் குடியேற அரசு உதவி வருகிறது. இதேபோல் பல்வேறு இடங்களில் அத்துமீறல்கள் நடைபெற்று வருகின்றன.

பல புராதன சிவாலயங்கள் அழிந்த நிலையில் காணப்படுகின்றன. அவற்றை அரசு காக்கவோ, பராமரிக்கவோ விரும்புவதில்லை. இலங்கையில் புதையுண்ட, மறைந்து கிடக்கும் சிவாலயங்களைக் கண்டுபிடிக்க இந்தியத் திருநாட்டிலுள்ள தொல்பொருளாராய்ச்சியாளர்களை இங்கு ஆய்வுக்குட்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால் பல உண்மைகள் வெளி வரும். இதற்கு தங்களின் அனுகூலமான ஆதரவு கிடைக்குமென நம்புகின்றோம்.

இப்பிரச்சினை தமிழர் பிரதேசங்களின்அதிகாரம் தமிழரிடமில்லாததால் ஏற்பட்டதாகும். இதன் யாதார்த்தம் யாதெனில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமையேயாகும். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாத வரை இந்துக்களின் புராதன இடங்களைப் பாதுகாக்க முடியாததோடு அவர்கள் பாதுகாப்பாகவும் வாழமுடியாது. இது ஒருபக்கம் இருக்க மதமாற்ற நடவடிக்கை இன்னோர் பக்கம் நடந்தேறிவருகிறது. இந்நிலை தொடர்ந்தால் இலங்கையில் இந்துக்கள் முழுமையாக அழிந்திடலாம். இதனைத் தடுப்பதற்குத் தங்களின் நடவடிக்கையையே இலங்கைத் தமிழ் மக்கள் எதிர்பார்த்திருக்கிறார்கள்.

ஆகையால் இந்துக்களைப் பாதுகாக்க – இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண – இந்தியத் திருநாட்டின் 75ஆவது சுதந்திர நாள் செயற்திட்டத்தில இதனையும் இணைத்துக் கொள்ளுமாறு தங்களை மிகுந்த விநயமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

தாங்களும், இந்தியத் திருநாடும் உலகில் அபரிமிதமான சாதனைகளைப் படைக்க வேண்டுமென எமது வழிபடு தெய்வமான சிவகாமசுந்தரி சமேத நடராஜ மூர்த்தியைப் பிரார்த்திக்கிறேன். – என்று உள்ளது.

## ஜெனிவாவைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் செப்ரெம்பர் 13ஆம் திகதி ஆரம்பித்து ஒக்டோபர் 7ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தொடரில் இலங்கையில்மனிதஉரிமைகள், பொறுப்புக்கூறல், நல்லிணகத்தை ஏற்படுத்தல் உள்ளிட்ட விடயங்களில் அடைந்துள்ள முன் னேற்றங்கள் தெடர்பில் இலங்கை அரசாங்கம் தனது விடயங்களை ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் வெளிப்படுத்தவுள்ளது. இந்நிலையில், அதுகுறித்து கருத்து வெளியிட்ட நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமைகள், நல்லிணக்கம் மற்றும் மறுசீரமைப்பு தொடர்பில் செயற்படுகின்ற உள்நாட்டு நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள செயற்பாடுகளின் முன்னேற்றங்கள் எதிர்காலத்திட்டங்கள் தொடர்பில் வெளிப்படுத்தப்படவுள்ளது.

குறிப்பாக, வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுப்பணியகம் ஆகியவற்றைக் கிரமமாகச் முன்னெடுத்துச்செல்லல், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க நிறுவனத்தின் ஊடாக, இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை கட்டியெழுப்பி எதிர்கால ஐக்கியத்தை உருவாக்குவதற்கான செயற்பாடுகள் பற்றி விடயங்கள் குறிப்பிடப்படவுள்ளன.

இதனை விடவும் சட்டம், ஒழுங்கு மற்றும் அரசமைப்பு விடயங்கள் பற்றிய விடயங்கள் தொடர்பில் எடுத்துரைக்கப்படவுள்ளது. குறிப்பாக அரசமைப்பில் நாடாளுமன்றத்திற்கு அதிகாரங்களை வழங்கும் வகையிலும் நிறைவேற்று அதிகாரத்தினை குறைக்கும் வகையிலும் முன்மொழியப்பட்டுள்ள 22 ஆவது திருத்தச் சட்டம் சம்பந்தமாக குறிப்பிடப்படவுள்ளது.

இதற்காக அண்மையில் கலந்துரையாடலொன்றும் நடத்தப்பட்டுள்ளது. சட்டமா அதிபர் திணைக்களம், வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு, நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒருமைப்பாடு, ஆகிய கட்டமைப்புக்களின் அதிகாரிகள் மட்டத்திலான கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

அடுத்துவரும் காலப்பகுதியில் காணாமலாக்கப்பட்டவர்கள் பற்றிய அலுவலகம் மற்றும் இழப்பீட்டு பணியகம் பற்றியும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் நாட்டின் எதிர்காலத்திற்காக இந்தக் கட்டமைப்புக்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய முறைமை தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

விசேடமாக, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரை எதிர்கொள்வதற்காக, அதனுடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களும் ஒன்றிணைந்து விசேட பொறிமுறையொன்று தாயரிக்கப்படவுள்ளது.

துரதிஷ்டவசமாக, ஒவ்வொரு இனங்களுக்குள் உள்ள கடும்போக்காளர்கள் இந்தவிடயங்களை முன்னகர்த்திச் செல்வதற்கு தடையாக இருக்கின்றார்கள். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையைப் பயன்படுத்தி தமது அரசியல் இலாபங்களை அடைவதற்கு விளைகின்றார்கள்.

பிரச்சினைகள் தீர்க்கப்படுவதை அவ்வாறானவர்கள் விரும்புவதில்லை. அவர்கள் பிரச்சினைகளை நீடித்து, தமது அரசியல் இருப்பை தக்கவைத்துக் கொள்ளவே முனைகின்றனர். – என்றார்.

---

## போராட்டத்தைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தற்போதைய ஜனாதிபதி இதற்கு சாதகமாக செயற்பட்டால் மாத்திரமே அவரைத் தான் ஏற்றுக் கொள்வார் எனவும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு, கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் நேற்றுநடைபெற்ற புனித பாப்பரசர் பிரான்சிஸால், ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு இலட்சம் யூரோக்கள் (சுமார் நான்கு கோடி ரூபா) நன்கொடை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என பாப்பரசர் பலமுறை அழைப்பு விடுத்துள்ள போதிலும் இலங்கையில் நீதி கிடைப்பது அரிதாகவே காணப்படுவதாகவும் அரசியல் தலைவர்கள் சட்டத்தில் தலையிடுவதே இதற்குக் காரணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

---

## எஞ்சிய புலம்பெயர்...

–இவ்வாறு கோரியிருக்கின்றது ரெலோ அமைப்பு. இது தொடர்பாக அக் கட்சியின் பேச்சாளர் கு.சுரேந்திரன் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:–

நமது கோரிக்கையின் பிரதான காரணம் நாடு எதிர்கொண்டிருக்கும் பொருளாதார சிக்கலில் இருந்து மீள்வதற்கு முதலீடு மிக அவசியமாகிறது. புலம்பெயர் உறவுகள் பலர் இங்கு முதலீடு செய்வதில் இருக்கக்கூடிய பிரதான சிக்கல் பாதுகாப்பின்மை ஆகும். தாங்கள் பாரிய முதலீடுகளை இங்கு ஏற்படுத்திய பின்னர் தடைசெய்யப்பட்ட அமைப்புகளுடன் தொடர்பு இருப்பதாகக் காரணம் காட்டித் தங்கள் முதலீடுகள் முடக்கப்படவும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படவும் முடியும் என்று அச்சம் கொள்கிறார்கள்.

முகநூல் இணைப்புக்களைக் காரணம் காட்டியே பலர் கைது செய்யப்பட்ட சம்பவங்களை சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

எனவே முதலீடு செய்யத் தயாராக இருக்கும் புலம்பெயர் உறவுகள் அச்சமின்றித் தங்கள் முதலீடுகளைச் செய்வதற்கு இந்தத் தடைகளை நீக்குவது அவசியம் என்று உங்களிடம் சுட்டிக் காட்டியுள்ளோம்.

ஆகவே இதைக் கருத்தில் கொண்டு ஏனைய புலம்பெயர் அமைப்புகளையும் தனிநபர்களின் பெயர்களையும் நீக்குமாறு கோருகிறோம். – என்று உள்ளது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## விரட்டியவர் விரட்டப்படுகிறார்

ஒரு காலத்தில் நாட்டின் பாதுகாப்புத்துறையையே ஆட்டிப் படைத்த முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று தூர தேசம் ஒன்றிடம் கெஞ்சி மன்றாடி, விஸா பெற்று, வெளியே தெரியாத ஒரு ஹோட்டலுக்குள் தனது மனைவியுடன் ஒளித்துக் கிடக்கும் நிலைமை.

பாதுகாப்புச் செயலாளராகவும், ஜனாதிபதியாகவும் இருந்த சமயங்களில் பலரின் பாதுகாப்பைக் கேள்விக்குள்ளாக்கிய அவருக்கு இன்று ஒளித்திருக்கும் அறைக்குள் இருந்து வெளியே வருவதற்குக் கூடப் பாதுகாப்பு இல்லை என்ற நிர்கதி நிலைமை.

பாதுகாப்புப் படைகளைக் கையில் வைத்து நாட்டையே ஆட்டிப் படைத்த பிரகிருதி அவர்.

மனித உயிர்களைப் பந்தாடிக் கொன்றொழிக்கப் பச்சைக் கொடி காட்டி, இலங்கைத் தீவில் யுத்தக் கொடூரங்கள், யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குரூரங்கள், மிக மோசமான மனித உரிமை மீறல்கள் என மிருகத்தனப் போக்கு அரங்கேறுவதைப் பார்த்து ரசித்து, அதில் பிழைப்பும் அரசியலும் நடத்தியவர்.

தனது இராணுவ வாழ்க்கையிலும், அரசியல் செயற்பாடுகளிலும் பௌத்த, சிங்களப் பேரினவாதத் திமிர்த்தனத்தை – தடிப்பை – வீம்பை – அப்பட்டமாக வெளிப்படுத்தி, சிறுபான்மையினரை அடக்கி, ஒடுக்கி, நசுக்குவதில் மகிழ்ச்சி கொண்டாடிய உன்மத்தர் அவர்.

லட்சக் கணக்கான தமிழ் மக்கள் தங்கள் தாயகத்திலிருந்து வேரோடும் வேரடி மண்ணோடும் பூமிப் பந்தெங்கனும் பரந்து தூக்கி வீசப்படுவதற்குக் காரணமான பிரதான சூத்திரதாரிகளில் இவர் மிக முக்கியமானவர்.

உயிருக்கும் வாழ்வுக்கும் தஞ்சம் கோரி உலகெங்கும் நம் தமிழ் உடன் பிறப்புகளை அலைவதற்குத் தாயகத்திலிருந்து விரட்டிய அதிகார வெறியர் அவர்.

இன்று தமக்குத் தஞ்சம் புக ஓரிடம் இல்லாமல், தேசங்கள் தோறும் கெஞ்சும் இக்கட்டு அவருக்கு.

இவ்வளவு நெருக்கடி வந்தபோதும் கோட்டா அரசின் பிதாமகரான மஹிந்த ராஜபக்ஷ நாட்டை விட்டுத் தப்பி ஓடவில்லை.

முப்படைகளையும் பொலிஸையும் தன் முழுக் கட்டுப்பாட்டில் வைத்திருந்த போதுதான் –

நாட்டின் முதல் தளபதி – தளகர்த்தர் – என்ற பதவி நிலையில் இருந்தபோதுதான் –

நாட்டில் தமக்குப் பாதுகாப்பே இல்லை என்று நாட்டை விட்டு ஓட வேண்டிய பேரவலம் அவருக்கு நேர்ந்தது.

நாட்டின் சிவில் நிர்வாக சேவையையே பாகிஸ்தான் போல இராணுவ மயப்படுத்த முயன்ற அவரின கீழ்தரமான மனப் போக்குக் கிட்டிய பாடம் இது.

பௌத்த, சிங்களப் பேரினவாதத் திமிரோடு, சிறுபான்மையினரைக் கொன்றொழித்த இனவாதிகள் மீது சட்டம் பாயாது என்ற தண்டனை விலக்களிப்புக் போக்கை நடைமுறைப்படுத்திய குற்றத்துக்கு – சட்டத்தின் நீதியான ஆட்சிக்கு சாவுமணி அடித்தமைக்கு – இயற்கையே கொடுத்த தண்டனைதான் இன்று மூடிய அறைக்குள் சுருண்டு கிடந்து செத்துச் செத்துப் பிழைக்கும் அந்தப் 'பெரிய' மனிதரின் இந்த அவல வாழ்க்கை.

மனித நேய அடிப்படையில் தாய்லாந்து அரசு வழங்கிய 90 நாள்கள் விசா அனுமதியில் அந்த நாட்டில் தஞ்சம் புகுந்திருக்கின்றார் அவர். ஆனால் மனித நேய அணுகுமுறையை இந்த மனிதருக்காகக் கணக்கிடுவது பொருத்தமேயற்றது என்பதுதான் நீதியாகும்.

# முன்னாள் ஜனாதிபதி கோட்டா எங்கு சென்றாலும் தமிழர்களின் நீதிக்கான போராட்டங்கள் தொடரும்!

## தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை திட்டவட்டம்




முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உலகத்தில் எந்தவொரு நாட்டுக்குள் சென்றாலும் உலகளாவிய நியாயாதிக்கத்தின் கீழ் அவரைக் கைது செய்யக்கோரும் தமிழர்களுக்கான நீதிக்கான போராட்டம் தொடரும் எனத் தமிழ்த் தேசியப் பண்பாட்டுப் பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சுவீகரன் நிஷாந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சுவீகரன் நிஷாந்தன் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய இலங்கையிலிருந்து அதிகாலை வேளையில் இராணுவ விமானம் மூலம் நாட்டை விட்டு வெளியேறி மாலைதீவுக்கு சென்றிருந்த நிலையில், அங்கு அவருக்கு எதிராக இலங்கை வாழ் மக்களால் முன்னெடுக்கப்பட்டிருந்த பாரிய போராட்டத்தின் விளைவாக மாலைதீவு அரசாங்கம் கோட்டாபயவை நாட்டைவிட்டு வெளியேறுமாறு அறிவித்ததையடுத்து அவர் அங்கிருந்து சிங்கப்பூர் சென்றிருந்தார்.

சிங்கப்பூர் சென்றிருந்த கோட்டாபயவை சிங்கப்பூரினுடைய சட்டமா அதிபர் கைது செய்து நீதியின் முன் நிறுத்தக்கோரி சிங்கப்பூரில் உள்ள தமிழர்களால் பாரிய போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்த வேளை இந்தப் போராட்டம் தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் ஒரே நேரத்தில் முன்னெடுக்கப்பட்டு சிங்கப்பூர் அரசிற்கு பாரிய அழுத்தத்தை கொடுத்திருந்தது என்பது நிதர்சனமான உண்மை.

இதன் காரணமாகவே சிங்கப்பூர் அரசு தனது நாட்டில் தொடர்ந்தும் அடைக்கலம் தர முடியாது என்று கைவிரித்திருந்த நிலையில் வியாழக்கிழமை தாய்லாந்து நோக்கி பயணித்திருந்தார் கோட்டாபய.

இந்த நிலையில், சிங்கப்பூர் சட்டமா அதிபரை நோக்கி தாயக, புலம்பெயர் மக்களால் முன்னெடுக்கப்பட்டிருந்த கையெழுத்துப் போராட்டம், இனி தாய்லாந்து சட்டமா அதிபரை நோக்கியதாக மாற்றம் செய்யப்படுவதோடு, முன்னராகப் பெறப்பட்ட கையொப்பங்கள் அனைத்தும் நீதிக்கான நோக்கத்தின் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையினரின் பார்வைக்கு தெரியப்படுத்தப்படுவதற்காக ஈழத்தமிழர்களின் சர்வதேச விவகாரங்களைக் கையாளும் புலம்பெயர் தேசத்தில் உள்ள பலம் பொருந்திய அமைப்பினருக்கு அவர்களுடைய அதிகாரபூர்வமான இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்வதற்காக மின்னஞ்சல்கள் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இனப்படுகொலை, மானிடத்திதுக்கெதிரான குற்றம் மற்றும் போர்க்குற்றங்களைப் புரிந்ததற்கான நம்பத்தகுந்த சாட்சியங்கள் உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கைகள் கூறியுள்ளன.

1948 ஆம் ஆண்டு இன அழிப்புச் சட்டத்தின் கீழும், 1949 ஆம் ஆண்டு ஜெனீவாச் சட்டங்களின் கீழும் மற்றும் 1977 ஆம் ஆண்டு சர்வதேச சட்டங்களின் கீழ் கையெழுத்துப் போராட்டத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

எனவே கோட்டாபய எந்த நாடு சென்றாலும் தாயகத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள தமிழர்களின் நீதிக்கான போராட்டம் தொடரும்.

எனவே தமிழர்களுக்கான நீதிக்கான போராட்டத்தில் அனைத்து தரப்பினரையும் பங்கெடுத்து உங்களது தார்மீக உரிமையை நிலைநாட்ட முன்வருமாறு தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை அழைப்பு விடுத்துள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

---

### தடை நீக்க அறிவிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பேரவை ஆகிய 6 அமைப்புக்கள் மீதான தடை நீக்கப்பட்டுள்ளது.

மேலும் இதுகுறித்து பேசிய அவர் –

ஏற்கனவே இந்த தடை நீக்கப்பட்டிருந்தது. 2015, 2019ம் ஆண்டு காலப் பகுதிகளில் ரணில் – மைத்திரி அரசாங்கத்தினால் இந்த தடை நீக்கப்பட்டிருந்தது. மீண்டும் கோட்டாபய ஆட்சிக்கு வந்ததன் பின்னர், அதே தடை விதிக்கப்பட்டது. ஆனால் மீண்டும் அந்த தடை நீக்கப்பட்டதாக ரணில் விக்கிரமசிங்க அறிவிக்கின்றார். தடை இருந்த காலத்திலேயே மங்கள சமரவீர, ரணில் விக்கிரமசிங்க போன்றவர்கள் 2003ம் ஆண்டு சிங்கப்பூரிலும், 2015 மற்றும் அதற்கு இடைப்பட்ட காலத்தில் கொழும்பிலும் தடை செய்யப்பட்ட அமைப்புக்களுடன் பேசியிருக்கின்றார்கள்.

நாடு கடந்த தமிழீழ அரசு, கனடா மக்கள் அவை, ஒவ்வொரு நாடுகளிலும் இருக்கின்ற மக்கள் அவைகளும், அதாவது புலம்பெயர் நாடுகளில் மக்கள் பலமுள்ள அமைப்புக்கள் இன்றும் தடை பட்டியலுக்குள் தான் இருக்கின்றன. 100 வீதமான தடையும் விதிக்கப்பட்டதாகவே இருக்கின்றது.

இந்த தடை நீக்குகின்றமையினால், ஒரு பெரிய மாற்றங்கள் ஏற்பட போவதில்லை. ஆனால் வெளிநாடுகளிலுள்ள 65 முதல் 70 சதவீத மக்களின் செல்வாக்கை கொண்ட கனடா மக்கள் அவை, நாடு கடந்த தமிழீழ அரசு, பிரான்ஸ் ஒன்றியம், சுவிஸ் ஒன்றியம் போன்ற மக்களின் செல்வாக்கை கொண்ட அமைப்புக்கள் இப்போதும் தடையில்தான் இருக்கின்றன.

இந்த தடை நீக்கமானது, ஒட்டு மொத்த புலம்பெயர் தமிழர்கள் மீதான தடை நீக்கியதாக கருதப்படாது. தமிழீழத்தை கைவிட்டோம் என்று கூறுவோரின் மீதான தடையையே அரசாங்கம் நீக்கியுள்ளது. இது வெளிப்படையான தார்மீகமான தடை நீக்கம் என்று கருத முடியாது. இதுவொரு சரியான தடை நீக்கம் என்றால், நாடு கடந்த தமிழீழ அரசு உள்ளிட்ட அனைத்து அமைப்புக்கள் மீதான தடையை நீக்கியிருக்க வேண்டும்.

உலக நாடுகளிடம் ஏமாற்று வித்தையொன்றை காண்பிக்கும் இலங்கை அரசாங்கத்தின் வழமையான ஏமாற்று நாடகத்தின் ஒரு கட்டம், ரணிலுடைய தந்திரத்தின் ஒரு பாதையே இது. ஆகவே இந்த தடை நீக்கத்தை மகிழ்ச்சி அடையகூடிய ஒன்றாக பார்க்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஶ்ரீதரன் தெரிவித்தார்.

---

### நிலைமையை நேரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிராந்தியத்திற்கான பிராந்திய பணிப்பாளர் ரோரி முங்கோவன் மற்றும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு அலுவலகத்தின் ஆசிய மற்றும் பசிபிக் பிராந்தியத்திற்கான பிராந்திய இயக்குனர் டேவிட் வில்லியம் மெக்லாக்லான் ஆகியோரே இலங்கை வரவுள்ளனர்.

ரோரி முங்கோவன் செப்டெம்பர் மாத தொடக்கத்தில் இலங்கை வரவுள்ளார். டேவிட் வில்லியம் மெக்லாக்லான் நாளை செவ்வாய்கிழமை இலங்கை வரவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர் மற்றும் திறைசேரி செயலாளர் ஆகியோரை ஐ.நா அதிகாரிகள் சந்திக்க உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# இந்தியாவின் புத்தாக்கச் செயற்பாட்டில் படையெடும் புதிய புதிய நிறுவனங்கள்!

**அபிவிருத்தித் துறையில் 'ஸ்டார்ட் - அப்' என்ற சொல் இப்போது அதிகம் பயன்படுத்தப்படுகின்றது. புத்தாக்க செயல்பாட்டின் முதல் கட்டங்களில் உள்ள நிறுவனத்தை இது குறிக்கிறது. ஸ்டார்ட் - அப்கள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தொழில்முனைவோரால் நிறுவப்பட்டவை, அவர்கள் தேவை இருப்பதாக நம்பும் ஒரு தயாரிப்பு அல்லது சேவை நிறுவனத்தை உருவாக்கிக் கட்டி எழுப்ப விரும்புகிறார்கள். இந்த நிறுவனங்கள் பொதுவாக அதிக செலவுகள் மற்றும் வரையறுக்கப்பட்ட வருவாயுடன் தொடங்குகின்றன, அதனால்தான் அவர்கள் துணிகர முதலீட்டாளர்கள் போன்ற பல்வேறு மூலங்களிலிருந்து மூலதனத்தைத் தேடுகிறார்கள்.**




இந்தியாவில் கடந்த பல ஆண்டுகளாக ஸ்டார்ட் – அப்கள் முக்கிய வார்த்தையாக இருந்து வருகிறது. இந்தியா தனது வளர்ச்சியை புதுமை மற்றும் தொழில் முனைவோர் மூலம் மேம்படுத்துகிறது. தற்போது, நாட்டில் 75,000 'ஸ்டார்ட் அப்கள்' உள்ளன. இது இந்திய சுதந்திரத்தின் 75 ஆவது ஆண்டுடன் இயைந்து போவது குறிப்பிடத்தக்கது.

பிரதமர் நரேந்திர மோடி ஓகஸ்ட் 15, 2015 இந்திய சுதந்திர தினத்தன்று செங்கோட்டையில் இருந்து ஆற்றிய சுதந்திர தின உரையில், மக்களின் தொழில் முனைவோர் திறனைத் தட்டிக் கேட்கும் புதிய இந்தியாவை கற்பனை செய்தார்.

அதையடுத்து நாட்டில் புத்தாக்கம் மற்றும் ஸ்டார்ட் – அப்களை வளர்ப்பதற்கு வலுவான சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதற்கான செயல் திட்டத்தை வகுக்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

கடந்த ஆறு ஆண்டுகளில், இந்தியாவை மூன்றாவது பெரிய சுற்றுச்சூழல் அமைப்பாக மாற்ற செயல் திட்டம் வெற்றிகரமாக வழிகாட்டியுள்ளது. தொடக்கத்தில் 10,000 ஸ்டார்ட் – அப்கள் 808 நாள்களில் அங்கீகரிக்கப்பட்டாலும், சமீபத்திய 10,000 நிறுவனங்கள் 156 நாள்களுக்குள்ளேயே எட்டப்பட்டு விட்டன. ஒரு நாளைக்கு 80க்கும் மேற்பட்ட ஸ்டார்ட் – அப்கள் அங்கீகாரம் பெறுகின்றமையால் இவ்விடயத்தில் இந்தியா உலகிலேயே உயர்வான விகிதத்தைக் கொண்டுள்ளது.

வளரும் தொழில்முனைவோருக்கு நம்பிக்கையூட்டும் மற்றும் ஊக்கமளிக்கும் எதிர்கால ஸ்டார்ட் – அப் கலாச்சாரத்தை இது மேலும் ஊக்குவிக்கிறது. இந்திய ஸ்டார்ட் – அப் சுற்றுச்சூழல் அமைப்பு தொழில்முனைவோருக்கு மட்டுமல்ல, வேலை தேடுபவர்களுக்கும் நம்பிக்கையளிக்கிறது.

கவனத்தைக் கவரத்தக்க வகையில், 7.46 லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இது கடந்த ஆறு ஆண்டுகளில் 110 சதவீத ஆண்டு அதிகரிப்பைக் கண்டுள்ளது. உண்மையில், சுமார் 49 சதவீத இந்திய ஸ்டார்ட் – அப்கள் அடுக்கு ஹுஹு மற்றும் அடுக்கு ஹுஹுஹு ஆகியவற்றிலிருந்து வந்தவை. இது பெருநகர மாநிலங்களுக்கு மட்டுமின்றி இந்திய இளைஞர்களின் அளப்பரிய திறனை உறுதிப்படுத்துகிறது.

2016 ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட 'ஸ்டார்ட் – அப்ஸ் இந்தியா' திட்டம், முதன்மையாக ஸ்டார்ட் – அப்களுக்கான ஆரம்ப சூழலை வழங்குவதற்காக அமைக்கப்பட்டது.

இன்று நாடு முழுவதும் வளரும் தொழில்முனைவோர் மற்றும் கண்டுபிடிப்பாளர்களுக்கான ஏவுதளமாக இது உருவாகியுள்ளது.

நிதி, வரிச் சலுகைகள், அறிவுசார் சொத்துரிமைகளுக்கான ஆதரவு, எளிதாக்கப்பட்ட பொதுக் கொள்முதல், ஒழுங்குமுறை சீர்திருத்தங்களைச் செயல்படுத்துதல், சர்வதேச விழாக்கள் மற்றும் நிகழ்வுகளுக்கான அணுகல் மற்றும் பலவற்றை வழங்குவதன் மூலம் இது ஸ்டார்ட் – அப்களுக்கு உதவியுள்ளது.

தற்போது, அங்கீகரிக்கப்பட்ட ஸ்டார்ட் அப்களில், 12 சதவீதம் தகவல் தொழில்நுட்ப சேவைகளையும், 9 சதவீதம் உடல்நலம் மற்றும் வாழ்க்கை முறை விஞ்ஞானத்தையும், 7 சதவீதம் கல்வியையும், 5 சதவீதம் தொழில் மற்றும் வணிக சேவைகளையும், 5 சதவீதம் விவசாயத்தையும் வழங்குகின்றன. 'ஸ்டார்ட் – அப்ஸ் இந்தியா' திட்டம் நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு ஒத்ததாக மாறியுள்ளது.

ஒரு 'ஸ்டார்ட் – அப் இந்தியா உயர் மட்ட நிதித் திட்டம்' (SISFS), இந்திய அரசாங்கத்தால் ஏப்ரல் 1, 2021 முதல் செயல்படுத்தப்படுகிறது. இது தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான தகுதியான துறையில் அங்கீகாரம் பெற்ற ஸ்டார்ட் – அப்களுக்கு நிதி உதவி வழங்க வழி செய்கிறது.

கருத்து, முன்மாதிரி மேம்பாடு, தயாரிப்பு சோதனைகள், சந்தை நுழைவு மற்றும் வணிகமயமாக்கல் போன்றவற்றுடன் மேலான முதலீட்டாளர்கள் அல்லது துணிகர முதலீட்டாளர்களிடம் இருந்து முதலீடுகளை திரட்ட அல்லது வணிக வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்களிடம் இருந்து கடன் பெற ஸ்டார்ட் – அப்களுக்கு இது உதவுகிறது. இந்தக் கட்டமைப்பு மூலம் இந்தியா முழுவதும் தகுதியான விருத்தி வாய்ப்புகள் தகுதியான ஸ்டார்ட் – அப்களுக்கு வழங்கப்படுகிறது.

56 பல்வேறு தொழில்களில், இந்தியாவின் தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான துறைசார் ஸ்டார்ட் அப்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இன்டர்நெட் ஆஃப் திங்ஸ், ரோபோக்கள், செயற்கை நுண்ணறிவு மற்றும் பகுப்பாய்வு உள்ளிட்ட புதிய தொழில்நுட்பங்கள் தொடர்பான துறைகளில், 4,500 இற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

தவிரவும், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் ஒரு குடை அமைப்பாக இந்தியாவின் தேசிய முன்முயற்சி கண்டுபிடிப்புகளை உருவாக்குதல் மற்றும் பயன்படுத்துதல் கட்டமைப்பு தொடங்கப்பட்டது. இது அறிவு சார்ந்த மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த கண்டுபிடிப்புகளை லாபகரமான நிறுவனங்களாக வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்திய அரசாங்கத்தின் இளம் மற்றும் ஆர்வமுள்ள கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் ஸ்டார்ட் – அப்களை மேம்படுத்துதல் மற்றும் துரிதப்படுத்துதல் திட்டத்தின் மூலம் தவிர, தொழில்முனைவோரின் களத்தில் யோசனைகளை முன்மாதிரிகளாக மாற்றுவதற்கும், போஷிக்கப்படும் நிறுவனங்களுக்கு ஆரம்ப நிலை விருத்திக்கு பணம் சார்ந்த உதவியை வழங்குகிறது. இது மேன்மையான சிறப்பு மையங்களை நிறுவுவதற்கு ஊக்கப்படுத்தி, தூண்டுதல் மூலம் முதலீட்டுத் தயார் நிலைக்கு வழிகாட்டுதல் மற்றும் உதவியைத் தருகிறது.

**(மூலம்: ஏ.என்.ஐ.)**

# ஆசியப் பிராந்தியத்தில் வேகமாக வளரும் பொருளாதார நாடாக இந்தியா இருக்கும்

## நிதிச் சேவை நிறுவனங்களின் ஆய்வாளர்கள் தகவல்

மோர்கன் ஸ்டான்லி எனும் நிதிச் சேவைகள் நிறுவனத்தின் ஆய்வாளர்கள் தாங்க வெளியிட்ட அறிக்கையில், 2022 - 23 நிதியாண்டில் ஆசிய பிராந்தியத்தில் வேகமாக வளரும் பொருளாதார நாடாக இந்தியா இருக்கும் எனக் கூறியுள்ளனர்.

இந்தக் காலக்கட்டத்தில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7 சதவீதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கின்றனர்.

இதுதொடர்பாகமோர்கன்ஸ்டான்லிவெளியிட்டுள்ள குறிப்பில் கூறியிருப்பதாவது:–

இந்தியப் பொருளாதாரம் 10 ஆண்டுகளுக்கும் மேலாக சிறப்பாகச் செயல்படும் வகையில் அமைந்துள்ளது. இந்தியா குறித்து நாங்கள் ஆக்கப்பூர்வமான கண்ணோட்டம் கொண்டுள்ளோம். சமீபத்திய வலுவான தரவுகள் எங்கள் நம்பிக்கையை அதிகரிக்கச் செய்துள்ளன. இந்தியா உள்நாட்டு தேவையைப் பூர்த்தி செய்வதில் சிறந்த நிலையில் உள்ளது. ஆசிய பொருளாதாரத்தின் புறத்தேவைகளுக்கான வளர்ச்சி பலவீனமடையும் நிலையில், இந்தியாவின் இந்த நிலை முக்கியமானதாக இருக்கும்.

அந்த வகையில் இந்தியா கட்டமைப்பு மாற்றத்தினை மேற்கொள்ள வேண்டும். அது பொருளாதார உற்பத்தித் திறனை உயர்த்துவதை நோக்கமாகக்



கொண்ட தெளிவான கொள்கை மாற்றமாக இருக்க வேண்டும். ஏற்கனவே அரசு தொடர்ச்சியான சீர்திருத்தங்களை மேற்கொண்டுள்ளது. அது தனியார் முதலீட்டினை ஊக்குவிக்கும், வலுவான உற்பத்தித் திறனாக மாற வழி ஏற்படுத்தும். மசகு எண்ணெய் மற்றும் பிற பொருள்களின் விலைகள் குறைந்து வருவதால் இந்த நம்பிக்கை ஏற்படுகிறது. மசகு எண்ணெய் மற்றும் பாவனைப் பொருள்களின் விலைகள் மார்ச் 2022 உச்சத்திலிருந்து 23 - 37 சதவீதம் சரிவடைந்துள்ளது.

மேலும் இந்தாண்டு தொடக்கத்திலிருந்து பொருளாதாரம் முழு வேகத்தில் இயங்குவதும், பொருளாதார மீட்சிக்கு உதவியது.

கொவிட்டிற்கு முந்தைய நிலையை விட தேவை அதிகரித்துள்ளது. அனைத்து நிலைகளிலும் இதனைக் காண்கிறோம். இது ஊக்கமளிப்பதாக உள்ளது. இந்நிலையில் ரிசேர்வ் வங்கி வட்டி விகிதங்களைக் கடுமையாக உயர்த்த வேண்டிய அவசியமில்லை. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், நுண்மைப் பொருளாதார நிலைமையை கட்டுப்படுத்த, ரிசேர்வ் வங்கி உள்நாட்டு தேவை வளர்ச்சியை குறைக்க தேவையில்லை. குறுகிய கால கண்ணோட்டத்தில் அரசு தனியார் முதலீட்டை அதிகரிப்பதில் கவனம் செலுத்தாமல், வருமான ஏற்றத்தாழ்வுகளை குறைக்கும் முயற்சியில் இறங்குவது முக்கிய ஆபத்தாக இருக்கும்.

ஏற்றுமதியைப் பொறுத்தவரை ஆசியாவின் மற்ற நாடுகளை போலவே இந்தியாவிலும் அது குறையும். இருப்பினும் பொருள்கள் ஏற்றுமதியை விட சேவைத் துறைகளின் ஏற்றுமதி சிறப்பாக இருக்கும். இது ஒரு தணிக்கும் காரணியாக செயல்படும் என எதிர்பார்க்கிறோம். – இவ்வாறு கூறியுள்ளனர்.

# அனுமதிகளின்றி மதில் கட்டும் கஜேந்திரகுமார் கட்டுமானப் பணியை உடன் நிறுத்த உத்தரவு!

## யாழ். மாநகர முதல்வர் அதிரடி நடவடிக்கை



அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வீட்டு மதில் அனுமதியின்றி கட்டப்படுவதால், கட்டுமானப் பணியை உடனடியாக நிறுத்த யாழ்.மாநகரசபை தீர்மானித்துள்ளது. யாழ்ப்பாணம் நல்லூர் குறுக்கு வீதியில், புதிதாக வீடொன்றை நிர்மாணித்துள்ள கஜேந்திரகுமார் பொன் னம்பலம், அந்த வீட்டுக்கான மதில் கட்டுவதற்கான அனுமதியை யாழ்.மாநகர சபையில் பெறவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் யாழ்.மாநகரசபை அமர்வு வெள்ளிக் கிழமை நடந்த போது, 'உங்கள் கட்சியின் தலைவர் என்பதால் அவர் அனுமதியின்றி மதில் கட்டுவதை அனுமதித்துள்ளீர்களா?' என கூட்டமைப்பின் மாநகரசபை உறுப்பினர் ப.தர்சானந், முதல்வர் வி.மணிவண்ணனைப் பார்த்து கேள்வியெழுப்பினார். அனுமதியற்ற கட்டுமானங்களை அனுமதிக்க முடியாது. அதனால் அந்த கட்டுமான பணிகளை உடனடியாக இடைநிறுத்துவதுடன், முறைப்படியான அனுமதி பெற்று கட்டுமானத்தை தொடரும்படி அறிவியுங்கள் என உத்தியோகத்தர்களுக்கு முதல்வர் உத்தரவிட்டார்.

# உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு 80 வீத பாடசாலை வருகை தேவைநீக்கம்

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு 80 வீத பாடசாலை வருகை தேவை டிசெம்பர் மாதம் பரீட்சைக்கு தோற்றவு

இது தொடர்பில் பாடசாலை அதிபர்களுக்குத் தேவையான உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன என அமைச்சு தெரிவித்துள்ளது.

கொவிட் 19 நெருக்கடி மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மாணவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, உயர்தர மாணவர்கள் தொடர்பில் கல்வி அமைச்சு பல தீர்மானங்களை எடுத்துள்ளது.

இதன்படி, உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு அரச சார்பற்ற நிறுவனமொன்றில் அங்கீகரிக்கப்பட்ட பட்டப் படிப்பை மேற்கொள்வதற்காக வழங்கப்படும் வட்டியில்லா கடன் திட்டம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படும்.

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரமும் கல்வி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வட்டியில்லா கல்விக் கடன் திட்டம் 2017 இல் தொடங்கப்பட்டது. இதேவேளை, 2019/2020 உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப் படையில் தேசிய கல்வி விஞ்ஞான பீடங்களுக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் காலக் கெடுவை ஓகஸ்ட் 19 ஆம் திகதி வரை நீடிக்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

கல்வி அமைச்சின் சுகாதாரம் மற்றும் போசாக்கு பிரிவால் நடைமுறைப்படுத்தப்படும் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் ஒரு மாணவருக்கு ஓர் உணவுக்காக ஒதுக்கப்படும் தொகையை அதிகரிக்கவும் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளர் இதனை தெரிவித்துள்ளார். தற்போது ஒரு மாணவருக்கு நாள் ஒன்றுக்கு 30 ரூபா 60 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். தற்போது 7 ஆயிரத்து 920 பாடசாலைகளில் 11 லட்சம் மாணவர்கள் இந்த நன்மைகளைப் பெற்று வருகின்றனர் எனக் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# இறக்குமதியாகும் பொருள்களுக்கு மேலும் கட்டுப்பாடுகளை விதிக்குக!

## மத்தியவங்கி நிதி அமைச்சுக்கு அறிவிப்பு

எதிர்வரும் காலங்களில் அந்நிய செலாவணி நெருக்கடி மோசமடையக்கூடும் என்பதால் அத்தியாவசியமற்ற பொருள்களின் இறக்குமதியை மேலும் கட்டுப்படுத்துமாறு இலங்கை மத்திய வங்கி நிதியமைச்சிற்கு அறிவித்துள்ளது.

நாட்டின் வெளிநாட்டு கையிருப்பு மீதான தாக்கம் எதிர்காலத்தில் தொடர்ந்து அழுத்தத்துக்கு உள்ளாகும் என்பதால், இறக்குமதி கட்டுப்பாடு உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என மத்திய வங்கி அறிவித்துள்ளது.

எரிபொருள், மருந்து மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு டொலர்கள் தேவைப்படுகின்றமையால், அத்தியாவசியமற்ற பொருள்களின் இறக்குமதியைக் கடுமையாகக் கட்டுப்படுத்துமாறு மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி, இறக்குமதி மட்டுப்படுத்தப்பட வேண்டிய அத்தியாவசியமற்ற பொருள்களின் மூன்று பட்டியல்களையும் மத்திய வங்கி அனுப்பியுள்ளதுடன், இரண்டாயிரத்து ஐந்நூறுக்கும் மேற்பட்ட அத்தியாவசியமற்ற பொருள்கள் இதில் உள்ளடங்குகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, திறந்த கணக்கு முறையின் கீழ் பொருள்களை இறக்குமதி செய்வதற்கும் பொருள்களை விற்பனை செய்த பின்னர் பணமாகச் செலுத்துவதற்கும் தற்காலிகமாகத் தடை விதிக்குமாறும் மத்திய வங்கி நிதி அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

# பாடசாலைப் படிப்புக்களை முடிப்பதற்கு முன்னர் ஆண்களுடன் சேர்ந்து வாழும் பெண் பிள்ளைகள்

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்கொலைகள் மற்றும் சிறுவயதில் கர்ப்பம் தரிக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என சுகாதார அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். இந்நிலை மேலும் அதிகரிக்காமல் தடுக்கும் வகையில் சில நடவடிக்கை கள் எடுக்கப்பட்டுள்ளன என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி மனநல நிபுணர்கள் மற்றும் உளவியல் ஆலோசனை வழங்கும் விசேட வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளதாக அமைச்சு கூறியுள்ளது.

குறிப்பாக பாடசாலைப் படிப்பை முடிக்கும் முன், பெண் பிள்ளைகள் ஆண்களுடன் சேர்ந்து வாழும் போக்கு அதிகமாக இருப்பதாக சுகாதார அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் கூறினார். இதனால் இந்த மாவட்டத்தில் சிறுவயதில் பெண்பிள்ளைகள் கர்ப்பம் தரிக்கும் நிலை அதிகரித்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்தக் குறைபாடுகளைக் கண்டறிந்து அவற்றுக்கான விரைவான தீர்வுகளை வழங்குவதற்காக சுகாதார அமைச்சின் செயலாளர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட குழுவொன்று வடக்கிற்கு விஜயம் செய்யவுள்ளது.

# உள்ளூர் மதுபான வகைகளின் ஏற்றுமதியை அதிகரிக்க மதுவரித் திணைக்களம் திட்டம்!

உள்ளூரில் தயாரிக்கப்படும் மதுபான வகைகளின் ஏற்றுமதியை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் மதுபான ஏற்றுமதி மூலம் 2 கோடியே 50 லட்சம் டொலர்கள் வருவாய் கிடைத்ததாக அந்தத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் எம்.ஜே.குணசிரி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இந்த வருடத்தில் ஏற்றுமதி மூலம் 5 கோடி அமெரிக்க டொலர்களை வருவாயாகப் பெற முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அதேவேளை, இலங்கையில் உற்பத்தியாகும் மதுபான வகைகளின் தரக் கட்டுப்பாட்டைப் பேணும் நோக்கில் சில நடவடிக்கைகளைத் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

இதன் முதல் கட்டமாக தற்போது பரிசோதனை மற்றும் தர கட்டுப்பாட்டை பேணுதல் போன்றவற்றை திறம்பட முன்னெடுப்பதற்காக ஆய்வுகூடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருவதாகவும் மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார்.





# அக்கராயன் கிழக்கு கிராம மக்களின் தேவைகளை கேட்டறிந்தார் சிறீதரன்!

கிளிநொச்சி அக்கராயன் கிழக்கு மக்களின் தேவைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கேட்டறிந்து கொண்டார்.

அக்கராயன் கிழக்கு பொது நோக்கு மண்டபத்தில் கிராம மக்களுடனான சந்திப்பு நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய கிராமமாக இந்தக் கிராமம் உள்ளது. இந்த சந்திப்பில் மக்கள் எதிர்நோக்கும் கடுமையான பொருளாதார நெருக்கடி தொடர்பிலும் நீண்ட காலமாகக் கிராம மக்களால் பயிரிடப்பட்டு வந்த வயல்களில் சில காலமாக பயிரிடப்பட முடியாமல் இருக்கும் காரணத்தையும் மீள அந்தக் காணிகளைத் தமக்கு பெற்றுத்தருமாறும் மக்கள் கோரியிருந்தனர். இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு தீர்வைப் பெற்றுத்தருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் உறுதியளித்தார்.

இந்த விடயங்களுடன் குறித்த கிராமத்தில் மாணவர்கள் எதிர்நோக்கும் கல்வி மற்றும் உணவுத்தேவைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன் சமூகப் பிரழ்வுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

# ஓர் இனத்தை அழிக்கின்ற படைகளாகவே நாட்டில் அரச படைகள் இருந்திருக்கின்றன!





## கலையரசன் எம்.பி. காட்டம்

(பாறுக் ஷிஹான்)

அரச படைகள் இந்த நாட்டில் ஓர் இனத்தை அழிக்கின்ற ஒரு படையாகவே இருந்திருக்கின்றார்கள். சமாதானம் நீதியை நிலைநாட்டுகின்ற அரச படைகளாக அவர்கள் இந்த நாட்டில் இருக்கவில்லை.அது மாத்திரமன்றி அம்பாறை மாவட்டத்தின் எல்லையில் நாங்கள் பிறந்து வளர்ந்தவர்கள்.நேரடியாக எம்மவர்கள் கொலை செய்யப்பட்டதை அவதானித்தவன் என்ற வகையில் எல்லைக் கிராமங்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டன. குறிப்பாக அம்பாறை என்ற நகரத்திலும் கூட எங்களுடைய தமிழ் மக்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். இன்று அங்கு தமிழர்களின் எந்தவொரு குடியுருப்பும் இருந்த எந்தவொரு அடையாளமோ இல்லை என்ற செய்தியை சொல்ல விரும்புகின்றேன்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் குறிப்பிட்டார்.

அம்பாறை மாவட்டம் வீரமுனையில் 1990 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி இடம்பெற்ற படுகொலை தினத்தின் 32 ஆவது வருட நினைவேந்தல் நிகழ்வு அகம் மனிதபிமான வள நிலையம் சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் அமைப்பின் ஏற்பாட்டில் வீரமுனை பகுதியில் அனுஷ்டிக்கப்பட்ட வேளை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தனது கருத்தில் மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு –

தமிழர்களின் இன ஒழிப்பின் அங்கமாக இந்த வீரமுனை படுகொலை நடந்தேறி இருக்கின்றது. கடந்த 32 ஆண்டுகளுக்கு முன்னர் வடக்கு கிழக்கு மாகாணங்களில் எல்லைக்கிராமங்களில் வாழ்ந்த தமிழ் மக்கள் விரட்டி விரட்டி வெட்டப்பட்டு படுகொலை செய்யப்பட்ட இத்தினத்தை அனுஷ்டித்து அஞ்சலி செலுத்தி வருகின்றோம். உண்மையில் இலங்கை நாட்டில் தமிழராகப் பிறந்த எங்களுக்கு இது தான் நிலைமை என்ற செய்தியை உலகத்துக்கு சொல்கின்ற வகையில் இந்த நாட்டை ஆண்ட தலைவர்கள் தொடர்ச்சியாக அழித்து வந்திருக்கின்றார்கள் என்பது உதாரணமாகும்.

1990 ஆம் ஆண்டு தமிழ் மக்கள் வாழ்ந்த பிரதேசங்களில் எந்தவிதமாக கேள்வி கணக்குமின்றி கொடூரமான முறையில் சமாதானம் நீதியை நிலைநாட்டுகின்ற அரச படைகள் இந்த நாட்டில் ஓர் இனத்தை அழிக்கின்ற ஒரு படையாகவே இருந்திருக்கின்றார்கள். சமாதானம் நீதியை நிலைநாட்டுகின்ற அரச படைகளாக அவர்கள் இந்த நாட்டில் இருக்கவில்லை.அது மாத்திரமன்றி அம்பாறை மாவட்டத்தின் எல்லையில் நாங்கள் பிறந்து வளர்ந்தவர்கள்.நேரடியாக எம்மவர்கள் கொலை செய்யப்பட்டதை அவதானித்தவன் என்ற வகையில் எல்லைக் கிராமங்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டன.

குறிப்பாக அம்பாறை என்ற நகரமும் கூட எங்களுடைய தமிழ் மக்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். இன்று அங்கு தமிழர்களின் எந்தவொரு குடியுருப்பும் இருந்த எந்தவொரு அடையாளமும் இல்லை என்ற செய்தியை சொல்ல விரும்புகின்றேன்.இந்தக் கிராமத்தில் சுமார் 200 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்பதைத் தெளிவு படுத்த விரும்புகின்றேன். இங்கு வாழ்ந்த தமிழர்களைத் தேடி தேடி அழித்தார்கள். கல்விமான்களாக இருந்தவர்கள் சமூகத்தில் பற்றுறுதி கொண்டவர்கள். சமூகத்தை வழிநடத்தக் கூடியவர்களாக இருந்தவர்கள் உள்ளிட்டோரை அரச படையினர் திட்டமிட்டு அழித்திருந்தார்கள்.

ஆகவே, நாங்கள் இவ்வாறான நினைவுகளை ஏன் நினைவு கூர்கின்றோம் எனில் எதிர்காலத்தில் இந்த நாட்டில் தமிழர்கள் வாழ்வதற்குரிய அனைத்து உரிமையும் கிடைக்கப்பெற வேண்டும். தொடர்ச்சியாக இந் நாட்டில் தமிழர்கள் அடிமைத்தனத்துடன் தங்களது வாழ்வுரிமையை மறுக்கின்ற சூழலில் வாழ முடியாது என்ற அடிப்படையில் தான் நாங்கள் இந்த நினைவு கூரல்களை நினைவு கூர்ந்து வருகின்றோம்.குறிப்பாக அம்பாறை மாவட்டத்தின் எல்லைக்கிராமங்களில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள், யுவதிகள் கொலை செய்யப்பட்ட வரலாறுகளை மறந்து விட முடியாது.

அதன் அடிப்படையில் வீரமுனை மாத்திரமல்லாது சொறிக்கல்முனை ,பெரியநீலாவணை, சவளக்கடை, திராய்க்கேணி, காரைதீவு ,அக்கரைப்பற்று, உடும்பன் குளம், பொத்துவில், வளத்தாப்பிட்டி, மல்வத்தை போன்ற பிரதேசத்தில் திட்டமிட்டு எங்களது மக்கள் அழிக்கப்பட்ட வரலாறுகளை நீங்கள் நினைவு கூர வேண்டும். எனவே எங்கள் மக்கள் நிலையான சமாதானத்தை வேண்டியவர்களாக இந்த மண்ணிலே நிலையாக வாழ வேண்டும் என்பதற்காகத் தமிழர்களாகிய நாங்கள் எமது மக்கள் மீது அக்கறையுடன் தொடர்ச்சியாக எமது மக்களின் விடுதலைக்காக குரல் கொடுத்துக்கொண்டு இணைந்து பயணிப்போம் எனக் கூறினார்.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன், காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள், பொதுமக்கள் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

கடந்த 1990 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி அம்பாறை மாவட்டம் வீரமுனையில் இடம்பெற்ற படுகொலை தினத்தின் 32 ஆவது வருட நினைவேந்தல் நிகழ்வு வீரமுனையில் அனுஷ்டிக்கப்பட்டதுடன் வீரமுனையில் ஆலயத்துக்குள் புகுந்து இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் 55 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் அவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்பதற்காக 32 ஆவது வருடம் தொடர்ச்சியாக நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

இந்த சதிகாரர்களை நாங்கள் மறக்கவும் மாட்டோம். மன்னிக்கவும் மாட்டோம்.எதிர்கால சந்ததிக்கு இதனை எடுத்தியம்பும் பிரகாரத்தில் எதிர்காலத்தில் இப்படிப்பட்ட சம்பவம் இடம்பெறக்கூடாது என்பதற்காகவும் நினைவேந்தலை நடத்தி வருகின்றோம் என கலந்து கொண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

## பிரித்தானியப் பெண்ணுக்கு ஆதரவாக குரல்கொடுக்கும் மைத்திரிபால சிறிசேன



காலி முகத்திடல் போராட்டத்துக்கு ஆதரவளித்தார் எனக் குற்றம் சுமத்தப்பட்ட பிரித்தானிய பெண் கெய்லி பிரேசரின் விசாவை இரத்து செய்ய இலங்கை குடிவரவு குடியகல்வு திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த விடயத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மகளிர் முன்னணியும் இளைஞர் முன்னணியும் அவரது உரிமைகளுக்காகக் குரல் கொடுக்க முன்வந்துள்ளன.

இது தொடர்பாக எடுக்க வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வதற்காக முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேனவுடன் பிரித்தானிய யுவதிக்கும் பெண்கள் மற்றும் இளைஞர் அமைப்புகளின் தலைவர்களுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

அதற்கமைய, நாடாளுமன்றத்திலும், அரசியல் மற்றும் சமூக இயக்கங்களிலும் அவரது உரிமைகளுக்காக மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ள இந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## உள்ளூராட்சி மன்றங்களை உடனே கலையுங்கள் முஸ்லிம் காங்கிரஸின் முக்கியஸ்தர் வேண்டுகோள்

நாட்டில் பல சபைகள் நகர சபைகளாகவும், மாநகர சபைகளாகவும் தரமுயர்த்தப்பட்டும் சாய்ந்தமருது நகர சபை விடயம் மட்டும் அநாதையாக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிப்பொருளாளர் ஏ.சி.யஹியாகான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு

தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம். அதாவுல்லாவுடன் சேர்ந்து சாய்ந்தமருது மக்களை ஏமாற்றிய கல்முனை மாநகர சபை உறுப்பினர்களாக உள்ள தோடம்பழக் குழுவினருக்கு தக்க பாடம் புகட்ட சாய்ந்தமருது மக்களுக்கு நல்லதொரு சந்தர்ப்பம் இந்த சபைகளை கலைப்பதன் மூலம் அமையும்.

மேலும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு மிகக் குறைவாகவும் தேசிய காங்கிரஸுக்கு அதிகளவிலும் வாக்களித்த சாய்ந்தமருது மக்களை தே.கா. தலைவர் அதாவுல்லா எம்.பி உச்சளவில் ஏமாற்றிவிட்டார் எனவும் யஹியாகான் குறிப்பிட்டுள்ளார்.

மு. கா தலைமை சாய்ந்தமருது நகர சபை விடயத்தில் தெளிவான நிலைப்பாட்டில் உள்ளது. சாய்ந்தமருது மக்களின் கனவை நனவாக்குவதில் முஸ்லிம் காங்கிரஸ் உறுதியாகவுள்ளது.

தே.கா. தலைவர் சாய்ந்தமருது மக்கள் வழங்கிய ஆணைக்கு நன்றியுடையவராக இருக்க வேண்டும். இது விடயத்தில் அவர் ஏதாவது முயற்சிகள் செய்வாராயின் அதற்கு நாம் பூரண ஒத்துழைப்பை வழங்குவோம். அதை விடுத்து சபை பெற்றுத்தருவேன் என்று கூறி சாய்ந்தமருது மக்களை ஏமாற்ற இன்னும் முயற்சிக்கக் கூடாது.

சாய்ந்தமருதை சேர்ந்தவன் என்ற ரீதியில் நான் அடிக்கடி எங்கள் தலைவர் ரவூப் ஹக்கீமை நகர சபை விடயமாகப் பேசி வருகின்றேன்.

அதேவேளை நாடு பூராகவுமுள்ள உள்ளூராட்சி மன்றங்களைக் கலைத்து தேர்தலை நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் யஹியாகான் சுட்டிக்காட்டியுள்ளார்.

## சென்னை விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளாக நடித்து கொள்ளையடித்த இலங்கையர் இருவர் கைது

சென்னை விமான நிலையத்தில் தம்மை சுங்க அதிகாரிகளாக அடையாளப்படுத்தி இலங்கை பயணி ஒருவரிடம் தங்க நகைகளை கொள்ளையடித்த இரண்டு இலங்கை பிரஜைகளை சென்னை விமான நிலைய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இலங்கையிலிருந்து கடந்த திங்கட்கிழமை சென்ற 47 வயதான பெண் ஒருவரே இந்த பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளார்.

மேற்படி பெண் சென்னை விமான நிலையத்தினை சென்றடைந்த உடன் 31 மற்றும் 40 வயதுடைய இரு இலங்கையர்கள் தங்களை சுங்க அதிகாரிகள் என்று அறிமுகப்படுத்தியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அனுமதிக்கப்பட்ட வரம்பை மீறி நகைகளை எடுத்துச் செல்கின்றனர் எனக் கூறி, நகை மற்றும் வளையல்களை இருவரும் எடுத்துச் சென்றுள்ளனர்.

இதன்போது சந்தேகமடைந்த பெண், சுங்கத் துறைக்கு சென்று அவர்கள் மீது முறைப்பாடு அளித்த நிலையில், இருவரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# நுட்பியல் அவத்தை
# தமிழ் கணினி

ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் - தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)


மிக வேகமாக வளர்ந்து வரும் நுட்பியல் அவத்தை தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு பாரியளவு உதவிவருகிறது. அண்மையில் எமக்குக்கிடைத்த மகிழ்ச்சியான செய்தி மைக்ரோசாப்ட் விண்டோஸ் 11 தொழில் நுட்பத்தில் தமிழ் மொழிக்கான தமிழ் அஞ்சல் எழுத்துரு விசைப்பலகை சேர்க்கப்பட்டுள்ளது என்பதாகும்.

தமிழ் டிஜிற்றல் மயமாக்கல் பலவேறு தடைகளைத் தாண்டி வரவேண்டியிருக்கிறது. தமிழை யூனிகோட் எழுத்துருக்களுக்கு மாற்றும் தொழில் நுட்பம் இணையத் தமிழ் வளர்ச்சிக்கு பெருதும் உதவிவருகிறது. இருந்தாலும் எழுத்துரு மாற்றி மூலம் யூனிகோட் வடிவில் தமிழ் எழுதுதல், உருவாக்குதல் போன்ற சவால்கள் நிறைந்தவைகளாகவே உள்ளன. இந்த சவாலை மைக்ரோசாப்ட் விண்டோஸ் 11 அறிமுகம் செய்திருக்கின்ற தமிழ் எழுத்துரு ஓரளவிற்கு நிவர்த்தி செய்யும் எனலாம்.



தமிழின் தொழில்நுட்ப வளர்ச்சிக்கான மொழி மாற்றி தொழில்நுட்பம் மேம்பட்டு வருகிறது. தமிழ்க் கணினிக்கான மொழியியல் அல்லது மொழித் தொழில்நுட்ப வளங்களை உருவாக்குதல் தமிழ்க் கணினிக்கான ஜி தொழில்நுட்ப வளங்களுக்கான முயற்சிகள் இலங்கையிலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

டிஜிற்றல் ஊடகங்களில் பல்வேறு வகையான சிதைவுகளை தமிழ்மொழி எதிர்கொள்கிறது, டிஜிற்றல் ஊடகங்களான கலப்பு குறியீட்டு முறை, இலக்கண




மற்ற வெளிப்பாடுகள், வட்டார வழக்குகளின்; பயன்பாடு என்பவற்றில் இன்னும் மேம்பட்ட வடிவங்கள் தேவைப்படுகிறது. ஒரு மொழியை டிஜிற்றல் மயமாக்குதல் என்பது அதன் தனித்தும் கலாச்சாரம் என்பவற்றுடன் இணைத்து மெற்கொள்ளப்பட வேண்டும். இங்கு டிஜிற்றல் மயமாக்கல் என்பது தகவல்களை டிஜிற்றல் வடிவத்திற்கு மாற்றும் செயல்முறையாகும். இந்த வடிவத்தில், தகவல் தனித்தனியாக பைனரி தரவுகளாகக் குறிப்பிடப்படும்.

தமிழ் கணினி மற்றும் இணையப் பயன்பாடுகளில் வளர்ந்து வரும் முன்னேற்றங்களில் தொடர்ந்து கவனம் செலுத்த சர்வதேச அளவில் தமிழ் தகவல் தொழில்நுட்பத்திற்கான சர்வதேச மன்றம் (INFITT) சிங்கப்பூரில் உருவாக்கப்பட்டது, இது சிங்கப்பூர் அரசாங்கத்தின் ஆதரவுடன் இயங்கி வருகிறது.

இன்டர்நெட் மற்றும் கம்ப்யூட்டிங் தொழில்நுட்பங்களில் ஏற்பட்டுள்ள முக்கிய முன்னேற்றங்களுக்கறெப்ப தமிழ் மொழியை இசைவாக்கும் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் உலகளாவிய கணனி சாதனைகள் தமிழ்மொழிக்கு ஒத்துழைக்கின்ற பணி சிறப்பாக நடைபெறுகிறது. தமிழில் மின்னஞ்சல் அனுப்புதல், பெறுதல் அல்லது அரட்டையைக் கையாளுதல் ஆகியவை பெரிதும் எளிமைப்படுத்தப்பட்டுள்ளன. பார்வையற்றோர் நலனுக்காக உரை முதல் பேச்சுத் திருத்திகள் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழ் இணையதளங்களின் எண்ணிக்கை அதிகமாகி, வளர்ந்து வருகிறது. தமிழ் செய்தித்தாள்கள் மற்றும் இதழ்கள் மற்றும் மின் இதழ்கள் ஆகியவை இதில் அடங்கும். தமிழில் வாழ்த்து அட்டைகள், மேட்ரிமோனியல் தளங்கள், ஒன்லைன் கற்றல் ஆதாரங்கள், சமையல், அழகு குறிப்புகள், உடல் நலப் பிரச்சினைகள், பாடல்கள், திரைப்படங்கள், சுற்றுலாத் தகவல்கள், விளையாட்டுகள், புதிர்கள் மற்றும் பல. தமிழ் யுனிகோட் ஒரு உலகத் தரமாக மாறியுள்ளது மற்றும் பல கணினி பயன்பாடுகள் யூனிகோட் ஆதரவை வழங்கியுள்ளன,


அதே நேரத்தில், பல பிரச்சனைகள் நீடித்து வருகின்றன. தகவல் தொழில்நுட்பம், கணினியில் தமிழைப் பயன்படுத்துவதைப் பொறுத்தவரை, இந்த புதிய தொழில்நுட்ப சக்தியின் பலன்களை அனைத்து மக்களையும் சென்றடைவதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். ஆங்கில அறிவு இல்லாமல் தமிழில் கொடுக்கப்படும் தகவல்களைப் பயன்படுத்துபவர்கள் கணினியைப் பயன்படுத்த வேண்டும். தற்போதைய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு முயற்சிகளில் சில இது போன்றசிக்கல்களைதீர்க்கின்றன. அவ்வாறான ஒரு முயற்சியாகத் தான் விண் டோஸ் 11 தொழில் நுட்பத்தில் தமிழ் மொழிக்கான தமிழ் அஞ்சல் விசைப்பலகை சேர்க்கப்பட்டுள்ளது.

இந்த முயற்சிகள் நடைபறவில்லைனெறால்தமிழ்மொழி பல மொழிகளுக்குப் பின்தங்கிப் போயிருக்கும்.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுடன் இணைந்து கோயம்புத் தூரில் தமிழ் இணைய மாநாட்டை (2010) நடத்துவதில் காணப்பட்ட உற்சாகம், அதற்கு உலகெங்கு முள்ள தமிழர்கள் வழங்கிய ஒத்து ழைப்பு மேலும் தமிழ்மொழி டிஜிற்றல் மயமாக உதவுகிறது. இதில் டிஜிற்றல் தமிழ் வளர்ச்சிக்காக ஏராளமான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. ஏறக் குறைய 400 சர்வதேச வல்லுநர்கள், தமிழ்க் கணிப் பொறியின் சமகால வளர்ச்சிகளை உள்ளடக்கிய பல் வேறு தலைப்புகளைக் கையாளும் சுமார் 150 ஆய்வுக் கட்டுரைகளை விவாதித்து ஆக்க பூர்வமான முன்னெடுப்புக்களை மேற்கொண்டார்கள். அதன் பேறு தான் விண்டோஸ் 11 தொழில் நுட்பத்தில் தமிழ் மொழிக்கான தமிழ் அஞ்சல் விசைப் பலகை சேர்க்கப்பட்டது எனலாம்.

இதன் தொடர்ச்சியாக தமிழ் டிஜிற்றல் மயமாக்கலில் செயற்கை நுண்ணறிவு மற்றும் இயற்கை மொழி செயலாக்கம் பற்றிய ஆவணங்களில் உரை முதல் பேச்சு, தொடரியல் பாகுபடுத்துதல், எழுத்து அங்கீகாரம், எழுத்துப்பிழை சரிபார்ப்பு மற்றும் பல வற்றின் வளர்ச்சிகள் அடங்கும். இருமொழி தரவுத் தளங்கள், மின்னணு தமிழ் நூலகங்கள், மொபைல் சாதனங்களில் தமிழ், தமிழ் தேடுபொறிகள் மற்றும் தமிழில் பெரிய தரவுத்தளங்களை செயலாக்குவ தற்கான அணுகுமுறைகளை பல ஆவணங்கள் விவாதிக்கின்றன. சிலர் விக்கிபீடியாவில் கணினி உதவி தமிழ் கற்பித்தல், தமிழ் வலைப்பதிவு மற்றும் தமிழ் உள்ளடக்க மேம்பாடு முறைகளை விளக்குகி றார்கள். கணக்கீட்டு மொழியியல் போன்ற துறைகளில் சிறப்பு முயற்சிகள் மூலம் அடுத்த பல ஆண்டுகளில் பணியை முன்னெடுத்துச் செல்ல பல யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

தமிழ் டிஜற்றல் மயமாக்கலின் வெற்றிக்கு முக்கிய அடிப்படை இருக்க வேண்டியது அல்லது அதன் நோக்கங்களில் ஒன்று தமிழ்க் கணினியில் இளைய தலைமுறையினரின் ஆர்வத்தைத் தூண்டுவதாகும். தமிழ் கணினி போட்டிகள் மற்றும் விக்கிபீடியாவிற்கு பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களின் உற்சாகமான வரவேற்பு ஊக்கமளிக்கிறது. இதை நீடித்து விரிவுபடுத்த வேண்டும். ஏதிர்வரும் காலங்களில் தமிழ் மின் ஆளுமை வலுவடையும். தமிழ் இதழ்கள், தமிழ் மென்பொருள்கள், பல பன்னாட்டு நிறுவனங்களின் தமிழ் தொடர்பான முயற்சிகள் மற்றும் பலவற்றை உள்ளடக்கிய தமிழ் கணினி மற்றும் இணைய மேம்பாடுகளின் சிறப்புப் பங்கேற்பு வெளிப்பாடுகள் பல லட்சக்கணக்கான பார்வையாளர்களின் ஆர்வத்தை ஈர்க்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம்-93

### காலி முகத்திடல் எது வரை?

காலிமுகத் திடல் போராட்டம் ஓய்வாக்கப்பட்டு, கடைசிக் கூடாரமும் அகற்றப்பட்டு, அங்கிருந்த கடைசி மனிதரும் விலகி விட்டார். இனி என்ன ஆகப்போகிறது?

புலம்பெயரிலிருந்தசிலஅமைப்புகள் மீதும், சில தமிழ்ப் பிரமுகர்கள் மீதும் இருந்த தடைகளை ரணிலின் அரசு நீக்கிவிட்டது.

சர்வ கட்சி அரசு நிறுவும் முயற்சியை ரணில் முன்னெடுக்கிறார். அதற்கு ஆதரவாகத் தமிழ்த் தரப்புகள் பேசுகின்றன.

நீதியரசர் விக்னேஸ்வரன் தன்னோடு ரணில் நடத்திய பேச்சுக்களில் தமிழர்களுக்கான பிரச்சினைகளுக்குத் தீர்வு தரும் எண்ணம் அவருக்கு உண்டு, ஆதலால் ஆதரவு தரப் போகிறேன், விரைவில் அரசியல் கைதிகள் விவகாரம் தீரும் என்கிறார்.

அப்படியானால் அவற்றிலிருந்து முன்னேறுவதுதானே? இந்த வரலாறுகளின் நுணுக்கங்கள் நடக்கின்ற அல்லது நடைபெறப் போகின்ற அரசியலைக் கட்டுப்படுத்தப் போகின்றனவா என்று நண்பர் ஒருவர் உரிமையுடன் கேட்டார். அந்தப் பேச்சுக்களில் தமிழ் மக்களுக்கு முன்னால் இன்று உள்ள பாதைதான் என்ன என்பதை சொல்லுங்கள் எனவும் கேட்டார்.

வரலாற்றின் சம்பவங்களும் அவற்றின் விளைவுகளும் பாடங்களாக நமக்கு புதிய பாதைகள் வகுப்பதற்குத் துணையாகின்றன. சரித்திரங்களில் இருந்து படித்துக் கொள்ளாதவர்கள் என்றுமே திருந்திக் கொள்ளப் போவதில்லை என்ற வாக்குமொழி ஒன்று உண்டு.


நீதியரசர் தமிழ் மக்களுக்கு முன்வைக்கும் அரசியல், இங்கு வரலாறுகளில் பண்டா – செல்வநாயகம் காலத்தில் இருந்து நடக்காதவை அல்ல. அல்லது திருச்செல்வம் மந்திரி பதவி ஏற்றும் திருகோணமலை சிவன் கோயில் பிரதேசத்தை புனித நகரமாக பிரகனப்படுத்தச் செய்த நடவடிக்கைகளைக் கைவிட்டு அமைச்சரவையில் இருந்து வெளியேறியமை தெரியாதவர் அல்லர். அன்றில், நல்லாட்சி அரசின் காலங்களில் தமிழ்க் கைதிகளுக்குப் பொது மன்னிப்புக் கொடுத்து விடுவிக்க முடியாத என்ற நிலைமை அல்ல என்பதைப் புரியாதவர் அல்லர். அவை நடக்கலாம், நடக்கும் என்று நம்பிக்கைகளில் கைபிடிப்பதும், கைகுலுக்குவதும்தான் வழக்கமாய் இருந்திருக்கின்றது. பெறுபேறு என்னவாயிற்று என்பதைத்தான் அனுபவப் பாடங்களில் படித்துக் கொள்ள வேண்டும்.

ஒரு காரியத்தைத் தங்களுக்காகச் சாதித்துக் கொள்ள சிங்களப் பேரினவாதமும் அதன் அரசுகளும் இப்படியான கைகுலுக்கல் அணுகுமுறைகளை எடுப்பது வழமை. அவற்றை அனுபவரீதியில் கையாள வேண்டுமே ஒழிய, தனிமனித உறவுகளால், அன்றில், ஒருவரின் குணாதிசயங்களால் அவற்றுக்குத் தீர்வுகள் காணப் புறப்படுவதன் தாக்கங்களையும் அறிந்து கொள்ள வேண்டும்.

ஆஸ்திரேலியாவின் போக்கஸ் தமிழ் (Focus Tamil) வானொலியில் 8 ஓகஸ்ட் 2022 நடந்த சூம் சந்திப்பில் நீதியரசர் விக்னேஸ்வரனுடன் இவை பற்றிப் பேசினோம். பின்னர் அதன் கருத்தாக்கங்கள், திசை நோக்குப் பற்றி அவர் கலந்து கொள்ளாது 12 ஓகஸ்ட் 2022 நேயர்களுடன் அந்த வானொலியில் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. தமிழர் பிரச்சினைகளை ஒட்டி ரணிலின் பின்னணிகளைச் சுட்டிக்காட்டி, அவருக்கு இன்று இருக்கும் கை, கால் கட்டு நிலைகளில், மனம் இருந்து அவர் சொன்னாலும் நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய திராணி இருக்குமா, இந்தியாவின் ஒப்பந்தத்தைக் கூட ஏற்றவர் அல்லரே அவர் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அப்போதுதான் தற்பொழுது தான் சந்தித்த ரணில் வித்தியாசமானவர், தாராளமான மாற்றங்களுடன் நாட்டையும் பொருளாதார நெருக்கடியில் இருந்து வெளிக்கொணர வேண்டியவராக இருப்பதால் செய்ய வேண்டிய நிர்ப்பந்தங்களால் செய்வார் என்று நம்பிக்கை உண்டு என நீதியரசர் வாதிட்டார். இவற்றை மேலும் சிறிது துளாவி அசை போட்ட போது அவை, காலிமுகத்திடலில் வெளிப்படுத்தப்பட்ட – பாகுபாடற்ற இணைந்த சமூகம் என்ற – அடிப்படைகளிலா, அன்றில் தமிழர்களின் தனித்துவங்களின் தார்மீகங்களிலா என்று கோர, என்னுடன் அவருக்கு இருந்த நட்புறவில் 'நான் நம்பிக்கையின்றிப் பேசுகின்றேன்' என்றும் 'தான் நம்பிக்கை வைத்து முன்னேறுகிறார்' என்றும் பதில் வந்தது. நம்பிக்கை இல்லாமல் அல்ல, எத்தனையோ நம்பிக்கைகளின் பெறுபேறுகளை அவதானித்து, ஆராய்ந்த அனுபவங்களில்தான் கருத்திடுகிறேன் என்று முடித்தோம்.

தமிழ் மக்களுக்கு முன்னுள்ள வழி என்ன என்ற நேயர்கள் கேள்விகள் இருந்தபோது, இதைத்தான் முன்வைத்தேன், அதை என்னோடு உரிமையுடன் பேசிய நண்பனுடன் பகிர்ந்தேன் என்றார்.

கால்நடைகளைக் கிரமமாகத் தண்ணீர் குடிக்க நீர் நிலைகளுக்கு கொண்டு போகலாம், ஆனால் குடிப்பது அவற்றைப் பொறுத்தது, தமிழ் மக்கள் காலங்காலமாக தங்களது தன்மானம், தனித்துவம் என்பவற்றை உப்பு மூடைகளாகக் கட்டிக் கொண்டு திரிந்து, எவ்வளவோ சீரழிவுக்கும் இடையில் அதனைப் பாதுகாத்து வருகின்றனர். அந்தத் தன்மானம், தனித்துவம் என்பவற்றுக்குப் பொறுப்பான பாதுகாப்புக் களஞ்சியமாகத் தமிழரசுக் கட்சியைத்தான் தேர்ந்தெடுத்து வாக்களித்து வந்தார்கள். விடுதலைப் புலிகள் இல்லாத 2009 இற்குப் பின்னும் தமிழர் கூட்டமைப்பினரை ஆதரித்தார்கள். இன்றோ உள் வீட்டுப் பிரச்சினைகளாலோ அல்லது அடுத்த வீட்டு ஆதரவுகளாலோ தமிழரசுக் கட்சி, கூட்டமைப்பு இரண்டும் கூட பிளவுபடும் நிலைகளில் இருக்கின்றன. சில பகுதிகள் களஞ்சியத்தில் இருக்கும் உப்பு மூடைகளைக் காலக் கிரமங்களில் ஓடும் நீரில் போட்டு விட வேண்டும் என்கிறார்கள். அதில் உப்பு மூடைகள் கரைந்து, ஸ்ரீலங்காவின் தேசிய நீரோட்டத்தில் கலந்து விடும். கரையும் அந்த உப்பு மூடைகளால்நீரின்தன்மைஎவ்வகைக்கு மாறும் என்பதற்குக் காலங்கள்தான் பதில் சொல்ல வேண்டும். அப்படிச் செய்தால் அவற்றின் பொறுப்புக்கள், பாரங்கள் அடுத்த சந்ததிகாவது இல்லை என்பது இவர்கள் வாதம். தன்மானம், தனித்துவம்கொண்டஅந்தஉப்புமூடைகளைச் சேமித்துப் பாதுகாத்துக் கொண்டு இனப்



நீதியரசர் விக்னேஸ்வரன்

பிரச்சினைக்கான தீர்வுக்குப் பேரம் பேசக்கூடிய நிலைக்கு வளரவோ, உறுதி பெறவோ புலம்பெயர் அமைப்புகள், தமிழ் மக்களின் சுயாதீன அமைப்புகள் யாவும் ஒன்று சேர்ந்து அதற்கான கட்டுமானங்களைப் பலப்படுத்த வேண்டும். அதற்கான ஆதரவுகளை கனவுலகில் சஞ்சரிக்காது, யதார்த்த நிலையில் ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்துப் பதிவுகள்தான் முன்நின்றன.

காலிமுகத் திடல் போராட்டம் எழுப்பிய தாக்கங்கள், உணர்வுகள் ஓய்ந்துவிடவில்லை. அவை மக்களிடம் உறைகின்றன.

ஆனாலும் இந்தத் தொடர் விக்கிரமாதித்தன் கதை போல மீண்டும் மீண்டும் எழுந்து, வரலாற்றின் பாகங்களை முதுகில் தூக்கிப் போட வேண்டும் என எண்ணவில்லை. வரலாறு எவற்றை வழிகளாகத் தந்ததோ அவற்றைச் சுற்றியுள்ள சம்பவங்களைப் பார்த்துவிட்டு, அவை மக்களிடம் உறைந்து போக வேண்டும் என எண்ணுகிறேன்.

தொடர்ந்து இந்திய கட்டமைப்புகளின் குறுகிய பார்வை பற்றி பார்ப்போம்.

(வளரும்)



பண்டா – செல்வா ஒப்பந்தத்தின் போது....

# இந்தியா மற்றும் அமெரிக்காவின் தேவைக்காக வெளிவிவகார கொள்கையை மாற்றியமுடியாது!



## சரத் வீரசேகர காட்டம்

இந்தியா,அமெரிக்கா ஆகிய நாடுகளின் தேவைக்கமைய எமது வெளிவிவகார கொள்கையை மாற்றியமைத்துக்கொள்ள முடியாது.

யுவான் வோங் - 05 கண்காணிப்பு கப்பல் உளவு பார்ப்பதற்காக அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வருகை தருகிறது என இந்தியா குறிப்பிடுவது அடிப்படையற்றது என நாடாளுமன்ற உறுப்பினர் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

சீனாவின் யுவான் வான்ங் - 05 கண்காணிப்பு கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வருகை தருவதற்கான அனுமதியை முன்னாள் வெளிவிவகாரத் துறை அமைச்சர் ஜி.எல் பீரிஸ் வழங்கினார்.

தற்போதைய வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி வழங்கப்பட்ட அனுமதியை இரத்து செய்ய முயற்சிக்கின்றமை சர்வதேசத்தின் மத்தியில் இலங்கையின் வெளிவிவகார கொள்கையை மலினப்படுத்தும்.

யுவான் வோங் கப்பல் விவகாரத்தில் இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் அழுத்தம் பிரயோகிப்பதை அவதானிக்க முடிகிறது.

இவ்விரு நாடுகளின் தேவைகளுக்காக இலங்கையின் வெளிவிவகார கொள்கையினை மாற்றியமைத்துக் கொள்ள முடியாது.இலங்கையின் வெளிவிவகார கொள்கை நடுநிலையாக பேணப்பட வேண்டும்.

யுவான் வோங் - 05 கண்காணிப்பு கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வருகை தருவதை இந்தியா கடுமையாக எதிர்க்கிறது. இந்தியா மற்றும் அமெரிக்காவின் யுத்த கப்பல்கள் இலங்கைக்கு வருகை தரும் போது சீனா ஒருபோதும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. சீன கப்பல் உளவு பார்ப்பதற்காகவே அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வருகை தருகிறது என இந்தியா குறிப்பிடுவது அடிப்படையற்றதாகும்.

சீனாவின் கப்பல் இந்தியாவை உளவு பார்ப்பதற்கு அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருகை தர வேண்டிய தேவை கிடையாது. அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வருகை தராமல் கடற்பரப்பில் இருந்தவாறே இந்தியாவை உளவு பார்க்க முடியும். ஆகவே இந்த கப்பல் விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது. - என்றார்.

# வடக்கில் மோசமாக ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் தொடர்பில் ஆளுநர் அலுவலகத்தில் முறையிடலாம்!

## ஜீவன் தியாகராஜா அறிவிப்பு

வடமாகாணத்தில் உள்ள தமது காணியில் மோசடியாக ஆக்கிரமிக்கப்பட்ட அல்லது போலியான உறுதிப் பத்திரங்களால் ஏமாற்றப்பட்ட காணி உரிமையாளர்கள் தமது விவரங்களை யாழ்ப்பாணத்தில் உள்ள வடமாகாண ஆளுநரின் தலைமை அலுவலகத்தில் முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்க முடியும் என வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பியுள்ள செய்தி குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

வட மாகாணத்தில் உள்ள தனியார் காணிகளின் உரிமையாளர்கள் வெளிநாடுகளிலோ அல்லது வேறு எந்த பாகத்திலும் இருக்கின்ற நிலையில் அவர்களின் காணிகள் மோசடியான வழியிலோ போலியான உறுதிப் பத்திரங்கள் மூலம் அபகரிக்கப்பட்டு இருந்தால் அது தொடர்பில் ஆளுநர் செயலகம் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கின்றது.



ஆகவே பாதிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள் உரிமை கோரக் கூடிய ஆதாரங்களுடன் காணிப் பதிவு பற்றிய விவரங்களைப் பழைய பூங்கா வீதியில் உள்ள ஆளுநர் அலுவலகத்துக்கு அனுப்பும் பட்சத்தில் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வெளிநாடு சென்ற தனது மனைவியை வரவழைக்க பிள்ளையை கொலை செய்வதாக மிரட்டும் தந்தை!



தனது ஐந்து வயது குழந்தையை கத்தியைக் காட்டி கொலை செய்யப் போவதாக மிரட்டும் காணொலியை மனைவிக்கு அனுப்பிய தந்தையொருவர் குளியாப்பிட்டிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மனைவி வெளிநாடு சென்று மூன்று மாதங்கள் கடந்துள்ள நிலையில், அவரை வரவைப்பதற்காக அவர் இந்த செயலை செய்துள்ளார் என ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் அந்த காணொலியை மனைவிக்கும் அவர் வெளிநாடு செல்ல வசதி செய்து கொடுத்த நிறுவனத்துக்கும் அனுப்பியுள்ளார். தந்தையின் செயல் வெளிச்சத்துக்கு வந்ததையடுத்து மரண பயத்தில் அலறிக் கொண்டிருந்த ஐந்து வயது குழந்தையை குளியாப்பிட்டிய பொலிஸார் மீட்டுள்ளனர்.

குழந்தையின் கழுத்து பகுதியில் சிறு காயங்களுடன் தழும்பு இருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், தாய் வரும் வரை குழந்தை உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

# அதிக விலைக்கு எரிபொருளை வவுனியா நகரத்தில் விற்பனை!

## நிரப்பு நிலைய ஊழியர் கைது

வவுனியாவில் அதிக விலைக்கு எரிபொருளை விற்பனை செய்ததாக எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா நகர மணிக்கூண்டு கோபுரத்துக்கு அருகிலுள்ள வவுனியா தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க எரிபொருள் மீள் நிரப்பு நிலையத்தில் பணியாற்றும் எரிபொருள் நிரப்பும் ஊழியர் ஒருவர் அங்கு கொள்கலனில் எரிபொருளை சேமித்து அருகேயுள்ள வியாபார நிலையத்தில் வைத்து ஒரு லீற்றர் பெற்றோல் 1000 ரூபா படி விற்பனை செய்தார் என இரகசிய தகவல் கிடைத்துள்ளது.

எஇதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து செயற்பட்ட பொலிஸார் எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

இதன்போது கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 16லீற்றர்பெற்றோல்பொலிஸாரால்மீட்கப்பட்டுள்ளது.

மேலும், கைது செய்யப்பட்ட நபரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# மின்சார ஓட்டோவில் பயணித்த அமைச்சர்!

கொழும்பு, பொரலஸ்கமுவ பிரதேசத்திலுள்ள மின்சார ஓட்டோ பாகங்களை இணைக்கும் நிலையத்தை அவதானிப்பதற்காக அமைச்சர் பந்துல குணவர்தன விஜயம் மேற்கொண்டுள்ளார்.

போக்குவரத்து அமைச்சர் என்ற வகையில், பந்துல குணவர்தன மின்சார ஓட்டோக்களை பதிவு செய்வதற்கான மோட்டார் வாகன சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு அண்மையில் அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுள்ளார்.

அதற்கமைய அதன் செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்காக அமைச்சர் அங்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

எதிர்வரும் சில நாள்களில் மின்சார ஓட்டோக்கள் பாவனைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன்போது அமைச்சர் அங்கிருந்து ஓட்டோவில் பயணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையின் தேசிய பாலூட்டி பட்டியலில் இருந்து ராட்சத அணிலை நீக்க தீர்மானம்



இலங்கையின் தேசிய பாலூட்டியாக விளங்கும் ராட்சத அணிலை அதன் கொறித்தனமான உணவுப் பழக்கத்தால் அதிக பயிர் சேதம் விளைவிப்பதால் அதனை நீக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

பல விவசாயி அமைப்புகள் ராட்சத அணிலை தேசிய பாலூட்டி பட்டியலில் இருந்து நீக்குமாறு கேட்டுக் கொண்டன. கிரிஸ்லட் ராட்சத அணில் பயிர்களுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருப்பதாகவும், இது தேசிய பாலூட்டி என்பதால் இதை எதிர்த்து எதுவும் செய்ய முடியாது என்றும் விவசாயிகள் கூறுகின்றனர்.

இந்த விவகாரத்தில் அரசு கவனமுடன் இருப்பதாகவும், கிரிஸ்லட் ராட்சத அணிலை மாற்ற திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சர் அமரவீர கூறினார்.

ஓர் உள்ளூர் பாலூட்டியுடன், தேசிய பாரம்பரியங்கள் பற்றிய ஆலோசனைக் குழு உட்பட அனைத்து தரப்பினரிடம் நான் இந்த விடயத்தைப் பற்றிப் பேசுவேன். கிரிஸ்ல்ட் ராட்சத அணிலுக்கு பதிலாக இலங்கை சிறுத்தையை மாற்றுவது பற்றி நாங்கள் யோசித்து வருகிறோம். - என்று அமைச்சர் கூறினார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.08.2022இல் வெளியிடப்பெற்றது.

# ஆயரின் பெயரில் அமைந்து அரும்பணியில் ‘பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்’ நிறுவனம்

## யாழ் ஊடக அமையத்துடன் இணைந்து புதிய ஊடகப்பணிகள் – 07

- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம் இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்றர்)

**யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை பெயரிலே பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் அமைந்துள்ளது. பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் தொடக்கப்பட்ட கதை - அதற்கு ஓய்வு நிலை ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையின் பெயர் கொடுக்கத் தூண்டப்பட்ட காரணம் மற்றும் அதன் பணிகளைத் தொடர்ந்து விளக்குகிறது இக்கட்டுரை.**

அண்மைக் காலமாக காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழில் அதிக படங்களை இணைத்திருந்தேன். இவ்வாறு அதிக படங்களை இணைத்தமையால் கடந்த 07 ஆண்டு காலமாக வெளியிடப்பட்டு வரும் காலைக் கதிர் கிறிஸ்தவ செய்தி இதழுக்கு என்றுமில்லாதவாறு அதிக அழைப்புக்கள் உள்நாட்டில் இருந்தும் வட்ஸ்அப் மூலமாக வெளிநாடுகளில் இருந்தும் வந்துள்ளன. இவ்வளவு காலமும் செய்து வந்த இந்தப் பணிக்கு ஒரே வாரத்தில் சம்பாவனை கிடைத்தது போல் மகிழ்ந்தேன்.

பெரிய கட்டுரையைக் கஷ்டப்பட்டுப் படிக்காமல் படங்களை பார்த்து இலகுவாக விடயங்களை புரிந்து கொள்ள காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்கள் விரும்புகிறார்கள் போலும்.

இன்றைய நவீன சமூக ஊடகங்களின் வெற்றிக்கு



ரி.ஜிம்பிறவுண் அடிகளார் காணாமல் போனமை (20 ஓகஸ்ட் 2006); ஜி.ஏ.பிரான்சிஸ் யோசவ் அடிகளார் காணாமல் போனமை (18 மே 2009); எம்.எக்ஸ்.கிளி கருணாநரட்ணம் அடிகளாரின் கண்ணி வெடித் தாக்குதல் மரணம் (12 ஏப்ரல் 2008); இறுதிப் போரில் எம்.ரி.சறத் ஜீவன் அடிகளாரின் அதிர்ச்சி மரணம் (18 மே 2009) யாழ் மறை மாவட்டத்தை பிறப்பிடமாகக் கொண்டு மன்னார் மறை மாவட்டத்தில் இணைந்து பணியாற்றிய எம்.பாக்கிய றஞ்சித் அடிகளாரின் கிளேமோர் தாக்குதல் மரணம் (26 செப்டெம்பர் 2007); வங்காலை பங்கில் பணியாற்றிய யாழ் மறை மாவட்டத்தைச் சேர்ந்த எம்.மேரி பஸ்ரியன் அடிகளார் சுட்டுக்கொல்லப்பட்டமை (06 ஜனவரி 1985) என்ற மறக்க முடியாத சோக நிகழ்வுகள்.

இதுவே முக்கிய காரணம். இனி வருங்காலங்களில் அதிக படங்களை இணைப்போம்.

இதில் எனது படங்கள் அதிகமாய் இருப்பது இவ்வாக்கத்தின் தன்மைக்கேற்ப தவிர்க்கப்பட முடியாதது என்பததை புரிந்து கொள்ளுங்கள். ஏற்கனவே

(1)யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையின் வாழ்வும் பணியும்.

(2) மன்னார் மறைமாவட்ட ஆயராக நியமனம்

(3) யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயராக நியமனம்

(4) யாழ் மறைமாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கட்டுமானப் பணிகள்

(5) வேறு எந்த ஆயரும் அனுபவிக்காத கொடிய அனுபவத்தின் வழி பயணப்பாதை

((6) தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையின் ஆளுமை

(7) மன்னார் - யாழ்ப்பாண மறைமாவட்டங்களில்



யூசிப் என அழைக்கப்படும் சர்வதேச கத்தோலிக்க மாநாட்டில் 1997ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் கலந்து கொண்ட போது….

1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வின் போது நடந்த அந்த சம்பவத்தை மறக்கமுடியாது. அந்தச் சம்பவம் பற்றி ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகைக்குத் தெரிவிக்கப்பட்ட போது நான் ஆயருடன் இருந்தேன்.

யாழ்ப்பாணம் கத்தோலிக்க திருச்சபைக்கு மட்டுமல்ல இலங்கைக் கத்தோலிக்க திருச்சபைக்கும் பேரதிர்ச்சியைக் கொடுத்த சம்பவம் அது எனக் கடந்த வாரம் முடித்திருந்தேன்.

### 1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வின் போது நடந்த அந்த சம்பவம்



1997ஆம் ஆண்டு வத்திக்கான் வானொலிக்கு ‘பாதுகாவலன்’ பத்திரிகை ஆசிரியராக ஒரு பேட்டி வழங்கிய பின்னர். படத்தில் உரோமாபுரியில் கல்வி கற்றுக் கொண்டிருந்த சந்திரபோஸ் குறூஸ் அ.ம.தி. அடிகளார் - பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியர் ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் - வத்திக்கான் வானொலி தமிழ்ப்பகுதிப் பொறுப்பாளர் இந்தியா தமிழ் நாட்டைச்சேர்ந்த அருட்சகோதரி - உரோமா புரியில் கல்வி கற்றுக் கொண்டிருந்த ஜெயறஞ்சன் அடிகளார்

நான் நிதியாளராகப் பணியாற்றி வந்த கொழும்புத்துறை புனித சவேரியார் குருமடக் குடும்பத்துடன் மிருசுவிலுக்கு இடம்பெயர்ந்தோம். நான் ஒரு சிறிய குழுவினருடன் அவரிக்காட்டில் தங்கியிருந்தேன். பின்னர் கிளிநொச்சிக்கு இடம்பெயர்ந்து அங்கு குருமடத்தை இயக்குவோம் என அப்போது குருமட அதிபராக இருந்த எஸ். ஜே.இம்மானுவேல் அடிகளார் முடிவெடுத்தார். பல இடங்களிலும் பரந்திருந்த குருமட சகோதரர்களை இணைத்துக் கொண்டு கிளிநொச்சி ஆரோகணம் இல்லத்தில் குருமடத்தை இயக்கிய சில மாதங்களில் ஆயரிடம் இருந்து தன்னை மிருசுவிலில் வந்து சந்திக்கும் படி ஓர் அழைப்பு வந்தது.

நான் குருமட நிதியாளராக இருந்தமையால் நிதி பற்றிய அடுத்த நகர்வுகளையும் உணவுப் பொருள்களை எப்படி எல்லாம் பெறலாம் என்பது பற்றியும் கலந்துரையாடவே அழைக்கிறார் என நினைத்துக் கொண்டு மிருசுவிலுக்கு வந்தேன்.



1997ஆம் ஆண்டு வத்திக்கானில் அப்போதைய திருத்தந்தை தற்போதைய புனிதர் 2ஆம் யோவான் போல் அவர்களைச் சந்தித்தபோது

இடம்பெயர்ந்து மிருசுவிலில் அமைக்கப்பட்ட தற்காலிக ஆயர் இல்லத்தில் ஆயர் தங்கி இருந்தார். காலை 11 மணி இருக்கும். அவருக்கு முன்னால் நான் அமர்ந்து இருந்து பேசிக் கொண்டிருந்தேன். ஆயர் அந்தக் கடின காலத்திலும் மகிழ்வான ஒரு செய்தியைச் சொன்னார்.

நீர் குருவாகி இந்த ஆண்டு பத்து ஆண்டுகளை நிறைவு செய்துள்ளீர். குருமட நிதியாளராக ஓடித்திரிந்து சரியாகக் கஷ்டப்பட்டுள்ளீர். ஒரு மாதம் பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு ஒரு பயிற்சிக்கும் போய் வாரும். நான் எல்லா ஒழுங்கும் செய்துள்ளேன் என்றார். மகிழ்வாக இருந்தாலும் இந்தக் கடின காலத்திலும் எனது பத்து ஆண்டு குருத்துவ ஆண்டு நிறைவை நினைந்தும் எனக்கு ஒரு பயிற்சியோடு கூடிய விடுதலையைத் தந்திருக்கிறாரே என்ற வியப்பே மேலோங்கி இருந்தது.

அப்போது போல் றோகான் அடிகளார் கதவைத் தட்டி விட்டு உள்ளே வரும்படியான அழைப்பிற்குக் காத்திரா



2007 - 2011 ஆண்டுகாலப் பகுதியில் லண்டன் செபீட்கலாம் பல்கலைக்கழக ஊடக ஆய்வுக் கல்வியின் போது பல்கலைக்கழக கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தில் பணியாற்றிய போது பொறுப்பாளர் அருட்சகோதரி ஆன் லீ மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுடன்.

மலே வேகமாக உள்ளே வந்தார். ஏதோ விவரிதம் நடந்துள்ளது என்பது மட்டும் எனக்குத் தெளிவானது.

வந்த வேகத்திலேயே ஒரு மிகவும் துக்கமான செய்தி

காலைக்கதிர்
Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
கிறிஸ்தவ செய்தி
- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்; இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)

என்று சொல்லி விட்டு, ஆயர் என்ன என்று கேட்க நேரமே தராமல் யோண் லொறற் அடிகளார் நோயினால் இறந்து விட்டார் என்றார்.

‘மை கோட்…’ என்றவர் பின்னர் எதுமே பேசவில்லை.



2007 - 2011 ஆண்டுகாலப் பகுதியில் இலண்டன் செபீட்கலாம் பல்கலைக்கழக ஊடக ஆய்வுக் கல்வியின் போது பல்கலைக்கழக கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தில் பணியாற்றிய போது பொறுப்பாளர் அருட்சகோதரி ஆன் லீ மற்றும் செபீட்கலாம் மறைமாவட்ட ஆயருடன்.

அப்படியே அதிர்ந்து போனார். மாயான அமைதி நிலவியது. அவர் உள்ளத்தை சோகம் இறுகப் பற்றிக் கொண்டது. அந்த அமைதியைக் குழப்பாமல் அப்படியே மெதுவாக எழுந்து சத்தம் இடாமல் வெளியே வருவதற்குக் கதவை நோக்கி நடந்தேன். போல் றோகான் அடிகளாரும் அப்படியே நகர்ந்தார்.

இறுகி அடைத்துப் போன குரலில் என்னை நோக்கி ‘உம்மிடம்தான் சவேரியார் குருத்துவக் கல்லூரி வான் இருக்கிறது. அதில்தான் லொறற் அடிகளாரின் உடம்பை ஏற்ற வேணடும். பார்த்து உதவி செய்யும்’ என்றார்.

அப்போது பிறதராக இருந்த லியோ ஆம்ஸ்றோங் அடிகளார் லொறற் அடிகளாரைக் கதிரையில் இருப்பது போல் வான் பின் சீற்றில் இருத்தி தன்னோடு அணைத்து வைத்திருக்க சவேரியார் குருத்துவக் கல்லூரிக்குச் சொந்தமான வானில் ஏற்றி கொண்டு வந்தோம்.

மறுதினம் செம்பியன் பற்றிற்கும் அதே வானில் கொண்டு சென்றோம். அந்த சோகத்தின் உச்சக்கட்டமான நேரத்திலும் - பதற்றமின்றி - இறை சித்தத்தை ஏற்று - எவ்வளவு வேகமாக சிந்தித்தார் - செயற்பட்டார் என வியந்து போனேன். **(தொடரும்….)**